"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

ஆடி - ஆவணி - புரட்டாதி 2016



பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்

ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

பெருமையுடன் 21 வது வருடத்தில்

# RUBY'S
CATERING

020 8799 7180
www.rubyscatering.co.uk - mail@rubyscatering.co.uk

| உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு |
|---|---|---|





திருமணம் – பிறந்த நாள் – பூப்புனித நீராட்டு விழா
கலாச்சார நிகழ்ச்சிகள் – விருந்து உபசாரம்
அரங்கேற்றம் – வளைகாப்பு – பெயர் சூட்டும் விழா





ACCREDITED SRILANKAN CATERERS @

Hilton

உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற
தரம் மிகு இலங்கை மற்றும்
தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......

Tel: 020 8799 7180
mail@rubyscatering.co.uk - www.rubyscatering.co.uk

மணி 24

# கலசம்
# KALASAM

ஒலி 82

www.saivamunnettasangam.com

FREE ISSUE

**கலசம்**
**நிருவாகக் குழு**

**ஆசிரியர்**
க ஜெகதீஸ்வரன்

**உதவி ஆசிரியர்கள்**
வை சிவனருட்செல்வர்
சி அற்புதானந்தன்

**விநியோகம்**
சோ நிரஞ்சன்

**விளம்பரம் தொடர்புகள்**
மா இந்துசேகரன்

**நிருவாகம்**
வ இ இராமநாதன்

**வெளியீடு**
சைவ முன்னேற்றச் சங்கம்

**முகவரி**
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel/ Fax:
020 8514 4732

**மின்னஞ்சல்**
email:
smsukkalasam@gmail.com

## கற்றிலன் ஆயினும் கேட்க

பலர் கோயிலுக்குப் போகிறார்கள்; வழிபடுகிறார்கள், திருவிழா பார்க்கிறார்கள். ஆனால், சமயவிடயங்களில் ஆர்வம் குறைந்தவர்களாக; அவைபற்றி அறியவேண்டும் என்ற ஆர்வம் அற்றவர்களாக இருக்கிறார்கள். தங்கள் பிள்ளைகளின் கேள்விகளுக்கு விடை, விளக்கம் கொடுக்க இயலாதவர்களாக இருக்கிறார்கள். சமய அறிவுக் குறைபாடு இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். சமயக் கருத்துக்கள், தத்துவங்கள் எல்லாவற்றையும் விஞ்ஞான முறையில் விளக்கவேண்டும்; விளக்கலாம் என்று எதிர்பார்ப்பது இன்னொரு காரணமாக இருக்கலாம். **விஞ்ஞானத்தின்மூலம் மெய்ஞ்ஞானக் கருத்துக்கள் எல்லாவற்றுக்கும் விடைகாண; விளக்கம் கொடுக்க இயலுமா என்பது கேள்விக்குறி.**

யாழ்ப்பாணத்தில் கொக்குவில் என்றொரு ஊர் இருக்கிறது. அங்கேயுள்ள மஞ்சவனப்பதியில் முருகப்பெருமான் எழுந்தருளி அருள்பாலிக்கிறார். பல வருடங்களுக்குமுன் என் பெற்றோருடன் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களின் சொற்பொழிவுகள் கேட்கப் பலமுறை அங்கு போயிருக்கிறேன். புராணக்கதைகளைச் சுவைபடச் சொல்வதுடன் கேள்விகள் கேட்டு, சிறுவர்களுக்குப் புத்தகங்களும் பரிசாக அளிப்பது அவர் வழக்கம். கற்றறிந்தவர்களின் சிந்தனையைத் தூண்டும் அதேவேளை கல்லாதவர்க்கும் அறிவு விருந்தாக அவருடைய சொற்பொழிவுகள் இருக்கும்.

யாழ்ப்பாணத்தில் இருந்த இன்னொரு விசேடம், கோயில்களிலே கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம் என்பவற்றைப் படிப்பதும் உரைசொல்வதுமாகும். இந்தப் புராணபடனப் பழக்கத்தால் பண்டிதர்களும் பாமரர்களும் பயனடைந்தனர். சிறுவர்கள் சமயக் கருத்துக்களைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பாக அவை அமைந்தன. கற்காதவர்களும் கேட்டறிய அவை உதவின. நாளடைவில் இந்த மரபு சிறிது சிறிதாக மறைந்துவிட்டது என்பது கவலைக்குரியது.

இந்த நாட்டிலுள்ள கோயில்கள் மக்களுக்குச் சமய அறிவை, சமயம் பற்றிய சிந்தனையைத் தூண்டுவதற்கு எவ்வித முயற்சியும் எடுப்பதாகத் தெரியவில்லை. இதற்கு விதிவிலக்காக, சைவ முன்னேற்றச் சங்கம் வெள்ளிக்கிழமை தோறும் சமயச் சொற்பொழிவு நிகழ்த்திவருகிறது. தற்போது, அந்தவழியில் பெரியபுராணச் சொற்பொழிவுகளை நடத்துவது மகிழ்ச்சியளிக்கிறது. அவர்களின் பணி தொடரட்டும்.

*க ஜெகதீஸ்வரன்*
*ஆசிரியர்*

# இந்த இதழில்

| | |
|---|---|
| கடவுள் | 03 |
| ஆலய வழிபாடு | 05 |
| ஆடீர் ஊஞ்சல் | 06 |
| சிவபெருமானின் தத்துப்பிள்ளைகள் | 07 |
| Temple Steps | 14 |
| நாளென்செயும் கோளென்செயும் | 16 |
| ஆயிரம் பிறை கண்ட அன்னை | 30 |
| ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி விசேட தினங்கள் | 29 |
| இறையருள் பெறும் வழி | 31 |
| மஹாராஷ்டிரம் பயணக்கட்டுரை - குங்குமனேசுவரர் கோயில் | 32 |
| கணநாத நாயனார் | 34 |
| Hinduism in search of answers | 35 |
| ஸ்ரீஅஜபா நடனம் | 38 |
| கண்ணனும் தாத்தாவும் | 40 |
| Thirukural stories | 47 |

**அட்டைப்படம்: பன்னாலை மயிலையம்பதி வைரவர் ஆலயக் கோபுரம்**

**படம்: வ இ இராமநாதன்**

# கடவுள்

**(நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் அருளிய 'பாலபாடம்' புத்தகத்திலிருந்து)**

உலகமாவது சித்து, அசித்துமென இருவகைப்படும் பிரபஞ்சமாம். சித்து அறிவுடைய பொருள். அசித்து அறிவில்லாத பொருள். அசித்து என்றாலும் சடமென்றாலும் பொருந்தும். உலகம் தோன்றி நின்று அழியுங்காரியமாய் உள்ளது. ஆதலினால், உலகத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று தொழில்களையும் செய்வதற்கு ஒரு கடவுள் இருக்கிறார் என்பது நன்றாக நிச்சயிக்கப்படும்.

கடவுள் என்றும் உள்ளவர். அவருக்குப் பிறப்பும் இறப்பும் இல்லை. அவர் எங்கும் நிறைந்தவர். அவர் இல்லாத இடம் இல்லை. அவர் எல்லாம் அறிபவர். அவர் அறியாதது ஒன்றுமில்லை. அவருடைய அறிவு இயற்கை அறிவு. ஓருவர் அறிவிக்க அறிபவரல்லர். அவர் எல்லாம் வல்லவர். அவரால் இயலாத கர்மம் ஒன்றுமில்லை. அவர் அளவிடப்பட முடியாத ஆனந்தமுள்ளவர். தம்முடைய அனுபவத்தின் பொருட்டு வேறொன்றையும் வேண்டுபவரல்லர். அவர் தம்வயமுடையவர். பிறர்வயமுடையவரல்லர். அவர் உயர்வும் ஒப்பும் இல்லாதவர். அவருக்கு மேலானவரும் இல்லை. அவருக்கும் சமமானவருமில்லை. அவர் சகல லோகத்துக்கும் ஒரே நாயகர். அவர் செய்யும் தொழில்களுள் ஒன்றாயினும் அவருடைய பிரயோசனத்தைக் குறித்ததன்று. எல்லாம் ஆன்மாக்களுடைய பிரயோசனத்தைக் குறித்தவை. அவர் ஆன்மாக்களிடத்துள்ள கைம்மாறில்லாத அளவுகடந்த திருவருளே திருமேனியாக உடையவர்.

கடவுள் ஆன்மாக்கள் பொருட்டு வேதம் ஆகமம் என்னும் முதனூல்களை அருளிச் செய்தார். அவைகளிலே விதிக்கப்பட்டவைகள் எல்லாம் புண்ணியங்கள்; விலக்கப்பட்டவைகள் எல்லாம் பாவங்கள். அவர் புண்ணியத்தைச் செய்த ஆன்மாக்களுக்கு இன்பத்தையும், பாவத்தைச் செய்த ஆன்மாக்களுக்குத் துன்பத்தையும் கொடுப்பார். துன்பத்தைக் கொடுத்தலினால் அவரை வன்கண்ணரென்று கொள்ளலாகாது. தீமை செய்த பிள்ளைகளை மாதா பிதாக்கள் தண்டித்தலும், சில வியாதியாளர்களுக்கு வைத்தியர்கள் சத்திரமிட்டறுத்தலும், இரும்புக் கோல் காய்ச்சிச் சுடுதலும், கண்ணிற் படலத்தை உரித்தலும் அவர்களிடத்துள்ள இரக்கத்தினாலன்றி வன் கண்மையினால் அல்லவே! அதுபோலக் கடவுள் பாவஞ்செய்த ஆன்மாக்களைக் கண்டித்தல், அப்பாவத்தை ஒழித்து, மேலே பாவஞ் செய்யாவண்ணம் தடுத்து அவர்களை நல்வழியிலே செலுத்தி உய்வித்தற்கு ஏதுவாதலினால் அதுவும் கருணையேயாம்.

**ஆன்மா**

ஆன்மாக்கள் நித்தியமாய், வியாபகமாய், சேதனமாய், பாசத்தடை உடையவைகளாய், சரீரந்தோறும் வெவ்வேறாய் வினைகளைச் செய்து வினைப்பயன்களை அனுபவிப்பவைகளாய்ச் சிற்றறிவும் சிறுதொழிலும் உடையவைகளாய் தங்களுக்கு ஒரு தலைவனை உடையவைகளாய் இருக்கும்.

ஆன்மாக்கள் நல்வினை தீவினையென்னும் இருவினைக்கு ஈடாக நால்வகைத் தோற்றத்தையும், ஏழுவகைப் பிறப்பையும், எண்பத்திநான்கு நூறாயிர யோனிபேதத்தையும் உடையவைகளாய்ப் பிறந்திறந்துழலும்.

**நால்வகைத் தோற்றங்களாவன:**

அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்பவைகளாம். அவைகளுள் அண்டசம் முட்டையிற் தோன்றுவன. சுவேதசம் வேர்வையில் தோன்றுவன. உற்பிச்சம் வித்து, வேர், கிழங்கு முதலியவைகளை மேற்பிளந்து தோன்றுவன. சராயுசம் கருப்பையிற் தோன்றுவன.

**ஏழுவகைப் பிறப்புகளாவன:**

தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பவைகளாம். தாவரங்களென்றது மரம், செடி முதலியவைகளை. கருப்பையிலே தேவர்களும், மனிதர்களும், நாற்கால் விலங்குகளும்

பிறக்கும். முட்டையிலே பறவைகளும், ஊர்வனவும், நீர்வாழ்வனவும் பிறக்கும். வேர்வையிலே கிருமி, கீடம், பேன் முதலிய சில ஊர்வனவும், விட்டில் முதலிய சில பறவைகளும் பிறக்கும். வித்தினுள், வேர், கொம்பு, கொடி, கிழங்கு களினும் தாவரங்கள் பிறக்கும். தாவரம் என்றாலும், நிலையியற் பொருளென்றாலும் அசரமென்றாலும் பொருந்தும். தாவரமல்லாத மற்றைய ஆறு வகைகளும் சங்கமங்களாம். சங்கமமென்றாலும், இயங்கியற் பொருள் என்றாலும், சரமென்றாலும் பொருந்தும்.

தேவர்கள் பதினொரு நூறாயிர யோனிபேதம், மனிதர்கள் ஒன்பது நூறாயிர யோனிபேதம், நாற்கால் விலங்குகள் பத்து நூறாயிர யோனி பேதம், பறவைகள பத்து நூறாயிர யோனி பேதம், நீர வாழ்வன பத்து நூறாயிர யோனி பேதம், ஊர்வன பதினைந்து நூறாயிர யோனி பேதம். தாவரம் பத்தொன்பது நூறாயிர யோனி பேதம் ஆகத் தொகை எண்பத்து நான்கு நூறாயிர யோனிபேதம்.

ஆன்மாக்கள், தாம் எடுத்த சரீரத்திற்கு மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம் பொறிகளினாலும், சித்தத்தினாலும் அறியும் அறிவின் வகையினாலே, ஓரறிவுயிர், ஈரறி வுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐந்தறிவுயிர், ஆறறிவுயிர் என அறுவகைப்படும். புல்லும், மரமும் முதலியவை (ஸ்)பரிசத்தை அறியும் ஓரறிவுயிர்கள். சிப்பியும், சங்கும் முதலியவை அதனோடு இரத(ச)த்தை அறியும் ஈரறி வுயிர்கள். கறையானும் எறும்பும் முதலியவை அவ்விரண்டினோடு கந்தத்தையும் அறியும் மூவறிவுயிரகள். தும்பியும் வண்டும் முதலி யவை அம்மூன்றினோடு உருவத்தை அறியும் நாலறிவுயிர்கள். விலங்கும் பறவையும் அந்நான்கினோடு சத்தத்தையும் அறியும் ஐயறிவுயிர்கள். தேவர்களும் மனிதர்களும் அவ்வைந்தோடு சித்தத்தினால் அறியும் அறிவுடைய ஆறறிவுயிர்கள்.

ஆன்மாக்கள், தாம் பூமியிலே செய்த நல்வினை, தீவினை யென்னும் இருவகை வினைகளுள்ளும், நல்வினையின் பயனாகிய இன்பத்தைச் சுவர்க்கத்திலும், தீவியின் பய னாகிய துன்பத்தை நரகத்திலும் அனுபவிக்கும். அப்படி அனுபவித்துத் தொலைத்தும் தொலையாமல் எஞ்சி நின்ற இரு வினை களினாலே திரும்பவும் பூமியில் வந்து பிறந்து அவைகளின் பயன்களாகிய இன்பம், துன்பம் இரண்டையும் அனுபவிக்கும். இப்படியே தமக்கு ஒரு நிலைமையில்லாத கொள்ளி வட்டமும் காற்றாடியும்போல, கடவுளுடைய ஆக்ஞை யினாலே, கருமத்துக்கு ஈடாக, மேலே உள்ள சுவர்க்கத்திலும், கீழேயுள்ள நரகத்திலும் நடுவே உள்ள பூமியிலும் சுழன்று திரியும்.

இப்படிப் பிறந்து இறந்து உழலும் ஆன்மாக்கள் தாவரயோனி முதலிய கீழுள்ள யோனிகள் எல்லாவற்றிலும் பிறந்து பிறந்திளைத்து, புண்ணியமேலீட்டினாலே மனிதப் பிறப்பிலே வருதல் மிகவும் அருமையாம். அவ்வருமை ஆராயும் காலத்து, கடலை கையினாலே நீந்திக் கரையேறுதல்போலும். இத் தன்மையுடைய மனிதப் பிறப்பை எடுப்பினும் வேதாகமங்கள் வழங்காத மிலேச்ச தேசத்தை விட்டு அவை வழங்கும் புண்ணிய தேசத்திலே பிறப்பது மிகுந்த புண்ணியம்.

இவ்வருமையான மனிதப் பிறப்பை உண்டாக்கிய உயிர்க்குயிராகிய கடவுளை. மனம் வாக்கு காயங்களினாலே வழிபட்டு அழிவில்லாத முத்தியின்பத்தைப் பெற்று உய்யும் பொருட்டேயாம். சரீரம் கருப்பையில் அழியினும் அழியும் பத்து மாதத்திற் பிறந்த வுடனேயே அழியினும் அழியும். பிறந்த பின் சிலகாலம் வளர்ந்து அழியினும் அழியும். மூன்று வயசிற்குமேல் பதினாறு வயசு வரையிலுள்ள பாலாவத்தையில் அழியினும் அழியும். அதற்கு மேல் நாற்பது வயது வரையுள்ள தருணாவத்தையில் அழியினும் அழியும். அதற்கு மேற்பட்ட விருத்தா வத்தையில் அழியினும் அழியும். எப்படியும் இந்தச சரீரம் நிலையின்றி அழிவது உண்மையாம். அழியும் காலமோ தெரியாதே. இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ, யாது வருமோ, அதுவும் தெரியாதே, ஆதலால், இந்தச் சரிரம் உள்ள பொழுதே இதனது நிலையாமையை அறிந்து பெருங் கருணைக்கடலாகிய கடவுளை வழிபட்டு உய்ய வேண்டும்.

# ஆலய வழிபாடு

ஆலயத்தில் எப்படி வழிபடவேண்டும் என்று சைவ சமயத்திலும், வேதாகமங்களிலும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால் சைவசமயத்தவர்களாகிய நாம் அதைப் பின்பற்றாது, எப்படியும் கும்பிடலாம் என்ற கொள்கையுடன் குடிபுகுந்த நாடுகளில் ஆலயப் பிரவேசம் செய்கி றோம். எங்கள் சைவசமயத்திலே கட்டுப்பாடு இல்லை; எப்படியும் நடந்து கொள்ளலாம் என்ற பிழையான கருத்துடன் எங்கள் இளைய சமுதாயம் நடந்து கொள்கிறது. இன்றைய பெற்றோர் எமது மூதாதையர் எப்படி இறைவழிபாட்டை மதித்து உணர்வுபூர்வமாகவும் பயபக்தியுடனும் வாழ்ந்தார்கள் என்பதை தங்களுடைய பிள்ளைகளுக்கு விளங்கப்படுத்துவதில்லை. காரணம், பெற்றோர்களுக்கும் வெளிநாட்டில் வேகமாக வாழ்க்கையைக் கொண்டு நடத்தவேண்டிய நிர்ப்பந்தத்தினால் அவர்கள் இதில் அக்கறை கொள்வதில்லை. இதனால் இளஞ்சமுதாயமும் இதை ஒரு சாட்டாக வைத்து ஆலய வழிபாட்டில் கவனம் செலுத்துவதை மிகக் குறைத்துவிட்டது. இதைவிட, வழிபாட்டிற்கு என்று ஆலயத்தினுள் நுழைந்தபோதிலும் அவர்கள் சில சில ஒழுங்குமுறைகளைக் கவனிப்பதில்லை. எமது மூதாதைய பாட்டிமார் ஆலயத்திற்குச் செல்லும்போது அவர்களைப் பார்த்தால், எம்மை அறியாமலே இரு கைகளையும் கூப்பிக் கும்பிடத்தோன்றும்.

இப்போதைய இளம் சமூகத்தவர்கள் எப்படியான உடையணிந்து, விரைவாக வந்து, இறைவனை வழிபடுகிறார்கள் என்பதைக் காணும்போது எமது தமிழ், சைவ முறைகளைப் பேணகிறவர்களா, இல்லையா என்பதை உணர முடிகிறது. விளக்கு ஏற்றி, நேர்த்திக்கடன் செய்யும்போது தலை விரி கோலத்தோடு சுற்றி வரும்போது அவர்களின் தலைமயிரில் தீப்பிடித்தால் எப்படி இருக்கும் என்பதை உணராமல் வழிபடுகிறார்கள். வயதில் முதிர்ந்த பெண்களும் ஆலயப் பிரவேசத்தில் பிழைவிடுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இவர்களும் சில ஒழுங்குமுறைகளைக் கவனிப்பதில்லை. குருக்கள்மார் பூசை முடிவில் பிரசாதம் வழங்கும்போதும், அர்ச்சனை பண்ணும்போதும் ஒழுக்கம் பேணப்படுவதில்லை. உதாரணமாக, பிரயாணம் செய்வதற்குப் பஸ்நிலையத்தில் நிற்கும்போதும் ஏறும்போதும் முன்னுக்கு நிற்பவர்களைக் கவனிக்காது முண்டியடித்து ஏறுகின்றவர்கள்போல, ஆலயத்தில் விபூதி, தீர்த்தம் கொடுக்கும்போது வரி சையில் நின்று ஒழுங்குமுறையைப் பேணுவதில்லை. இவைகளை நோக்கும்போதும் சைவசமயத்தவர்களாகிய நாங்கள் எங்களுடைய சமயக் கோட்பாடுகளை மறந்து நடக்கும் பொழுதும் பார்ப்பதற்கு மிகவும் வேதனையாக இருக்கும்

பிற சமயத்தவர்கள் ஆலயத்திற்கு சென்று வழிபடும் முறைகளைக் காணும்போது, எங்கள் சைவசமயத்தவர்களின் பழக்கங்கள் கவலையைத் தரும். இக் குறைகளை எதிர்காலத்தில் இளைய சமுதாயத்தவர்கள் திருத்தவேண்டும். குடிபெயர்ந்து வாழ்ந்தாலும், எமது கலாசாரத்தைப் பேணி நடக்க வேண்டும்.. இதேபோல ஆடவர்களும், முக்கியமாக, தொண்டுகள் செய்யும்பொழுது பயபக்தியுடன் செய்யவேண்டும். பிறர் எம்மைப் பார்த்து பெருமைப் படக்கூடியதாக நாம் நடக்கவேண்டும். எம்மாலான இயன்ற தொண்டுகளைப் பிறரை எதிர்பாராமல் செய்வதுடன், பூரண மனத்தோடு இறைவனுக்கு எம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

**- து. பத்மனாதன் (Redbridge. UK)**

# 'ஆடீர் ஊஞ்சல்'

யாழ்குடாநாட்டிலே சித்தன்கேணி என்ற ஒரு கிராமம். கல்வி அறிவிலே சிறந்த பல பெரியோர்களைத் தந்த கிராமம் அது. தமிழிலே புலமை பெற்றவர்கள் அங்கு அதிகம். அக் கிராமத்தைச் சுற்றிப் பல பாடசாலைகள் இருக்கின்றன. பல பண்டிதர்கள் அங்கு இருந்தார்கள். அவர்களில் அமரர் அப்பாப்பிள்ளை ஆறுமுகமும் ஒருவர். அவர் சித்தன்கேணிப் பிள்ளையார் தலத்தில் உள்ள கந்தசுவாமிக் கடவுளுக்கு ஒரு நாமாந்தரிதை பாடியுள்ளர். நாமாந்தரிதை என்பது கருதிய பொருளை மறைத்துவைத்து, உட்கருத்துத் தெரியாமல், வேறொன்று தோன்றும்படி விநோதமாகப் பாடுதல். அதாவது, பொருளை வேறு நாமங்களிலே மறைத்து வைத்துப் பாடுதல். இதிலே ஊர்ப் பெயர்களான சுன்னாகம், மல்லாகம், மாதகல், பன்னாலை, பண்ணாகம், பொன்னாலை, தொல்புரம் என்பவை கருதிய பொருளை மறைத்திருக்கும் நாமாந்தரங்கள்.

**சுன்னாகத் தான்சுதனே மல்லா கத்துச்**
**சுடர்த்திருமா தகலான்றன் மருகாமாரான்**
**பன்னாலை யானத்தான் பகரும் சொல்லாற்**
**பண்ணாக மெல்லியலார் கணநாவற்**
**பொன்னாலை யானஅணி பொலியச் சீர்தொல்**
**புரமான புகழ்ச்சித்தன் கேணி வைகும்**
**அன்னாவெம் ஐயாவே அரசே அப்பா**
**அருட்கந்த சுவாமியே ஆடீர் ஊஞ்சல்.**

சுன்னாகத்தான் - சுல் + நாகத்தன் = வெள்ளியங்கரியில் வீற்றிருக்கும் பரமசிவன்

மல்லாகத்து - மல் + ஆகத்து = வலிமை கொண்ட மார்பின்கண்

திருமாதகலான் - திருமாது + அகலான் = மகாலக்குமியை நீங்காதிருக்கும் திருமால்

பன்னாலையான் - பன் + ஆலையான் = சொல்லப்படும் கரும்பை வில்லாகவுடைய மன்மதன்

பண்ணாகமெல்லியலார் - பண் + ஆகம் + மெல்லியலார் = இன்னிசையே திரு மேனியாகவுடைய தெய்வநாயகி, வள்ளிநாயகி என்போர்

நாவற்பொன்னாலையான - நாவல் + பொன்னால் + ஐ + ஆன = சாம்புநாதம் என்னும் மாற்றுயர்ந்த பொன்னாற் செய்யப்பட்ட

தொல்புரம் - பழைமை வாய்ந்த நகரம்.

**(ஆறுமுகனார் அற்புதம் என்ற நூலிலிருந்து)**

திருத்தொண்டர் புராணத்திலே போற்றப்பட்ட சிவனடியார்களுள் மூவர் இறைவரால் தமது பிள்ளைகளாகவே ஏற்கப்பட்டவர்கள். அவர்கள் 1 திருஞானசம்பந்தர் 2. சண்டேசுர நாயனார் 3 சுந்தரமூர்த்தி நாயனார் ஆகியோர்.

இறைவர் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரைப் பால்குடிக்கும் வயதில் - மூன்று வயதிற் தத்தெடுத்தார். சண்டேசுரரைப் பூணூல் பூண்ட ஏழு வயதுக் காலத்தில் தத்தெடுத்தார். சுந்தரமூர்த்தி நாயனாரை மணமகனாய் நின்ற 16வயதுக்காலத்திலே தத்தெடுத்தார்.

திருத்தொண்டர் புராணம் உண்மைச் சரித்திரங்களை உள்ளடக்கிய பெரிய காப்பியம். காப்பியத் தலைமகன் சுந்தரமூர்த்தி நாயனார் ஆவர். காப்பியத் தலைவிகள் இருவர். பரவையார், சங்கிலியார் என்பவர்கள்.

சுந்தரமூர்த்தி நாயனார் எப்படித் தத்தெடுத்த பிள்ளையாய் அமைகிறார் என்பதை முதற்கண் பார்ப்போம். மற்றைய இரு நாயன்மார்களைப்பற்றி இனிவரும் கட்டுரைகளிற் பார்ப்போம்.

# சிவபெருமானின் தத்துப் பிள்ளைகள்

*இடைக்காடு சுயம்பு*

திருக்கயிலாயத்திலே சிவபெருமான் அருளாட்சி செய்துகொண்டிருக்கிறார். கணநாதர்களுள் ஒருவராகிய ஆலாலசுந்தரர் சிவபெருமான் பக்கத்திலே நின்றுகொண்டு, அவர் அடிக்கடி மாற்றி அணியும் பொருட்டு மலர் மாலைகள் கொடுக்கத் தயாராய் வைத்துக்கொண்டும், அடிக்கடி பூசுவதற்கு விபூதிப் பேழையை ஏந்திக்கொண்டும் நிற்பார். அதிகாலையில் பூக்களைக் கொய்து மாலைகளாக்கி வைத்துவிடுவார். இவர் சிவபெருமானுக்குப் பிரியமான அணுக்கத்தொண்டர். ஒரு நாள் வழமைபோல் நந்தவனத்தில் பூக்கொய்ய அவர் நுழைந்தார். அங்கு முன்னமே பார்வதியமமையாரின் அணுக்கத்தொண்டராகிய இரு கன்னிகள் பூவெடுத்துக்கொண்டு நின்றார்கள். இவர்களுடைய பெயர்கள், அநிந்திதை, கமலினி எனப்படும். ஆலாலசுந்தரர் அக்கன்னியர்மேல் மனதைப் போக்கிப் பார்த்தார். அந்தக் கன்னியரும் அப்படியே இவரைப் பார்த்தார்கள். தவறை உணர்ந்து மூவரும் அம்மட்டில் தமது அலைந்த கவனத்தை நிறுத்தித் தத்தமது கடைமைகளை முடித்துக்கொண்டு நந்தவனத்தினின்றும் வெளியேறினார்கள். தொடர்ந்தும் தமது அணுக்கத்தொண்டைச் செய்யலனார்கள். சிவதொண்டர்கள் தமது சிந்தனையைப் புலன்வழிச்செல்ல விடக்கூடாது. பூப்பறிக்கும்போதும் மௌனமாய்ச் சிவ சிந்தனையுடனேயே இருக்கவேண்டும். இங்கே இவர்கள் பார்த்தது மட்டுந்தான் என்றாலும் அந்தப் பார்வையே வினைப்பயனுக்கு வித்தாகிவிட்டது. சிவபெருமான் ஆலாலசுந்தரரை விழித்து,

> **"மாதர்மேன் மனம் வைத்தனை தென்புவிமீது தோன்றிஅம் மெல்லியலாருடன்**
> **காதல் இன்பம் கலந்து அணைவாய்"**

என்றார். போ என்று சொல்லவில்லை. போய் வா என்றார். கயிலாயத்திலே இப்படி நிகழ்ச்சி நடவாது. ஆனால் இப்போ நடந்துவிட்டது. அதற்குக் காரணம் பொருத்தமாய்ச் சேக்கிழார் சொல்கிறார். அந்தக் காலத்தில் பூலோகத்துக்கு ஆலாலசுந்தரரின் சேவை தேவைப்பட்டது.

சிவனடியார்களின் சரித்திரங்களை உலகோர் உய்யும்படி முறையாக ஆவணப்படுத்தச் சிவ பெருமான் திருவுள்கொண்டார். இந்தக் காதல் சாயலை ஒரு சாட்டாகச் சிவபெருமான் எடுத்துக்கொண்டார்.

சேக்கிழார் சொல்வதைப் பார்ப்போம்.

**மாத வஞ்செய்த தென்றிசை வாழ்ந்திட**
**தீதி லாத்திருத் தொண்டத் தொகைதரப்**
**போது வாரவர் (ஆகிய ஆலால சுந்தரர்) மேன்மனம் போக்கிடக்**
**காதன் மாதரும் காட்சியிற் கண்ணினார்.**

இந்த ஆலாலசுந்தரர் பின்னர் சுந்தரமூர்த்தி நாயனாராய்த் திருத்தொண்டத்தொகை என்றும் தேவாரப் பதிகம் பாடுவார்.

திருத்தொண்டத்தொகை திருத்தொண்டர் புராணத்துக்கு மூல நூல். நம்பியாண்டார் நம்பிகள் திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாரின் அருளாதரவினால் மூலநூலை விரிவுபடுத்தினார். சேக்கிழார் சுவாமிகள் தில்லையம்பலக்கூத்தர் அருளினால் அதைப் பெருங் காவியமாக்கி உலகமுய்ய அருளினார். காதல் செய்ய முயன்ற குற்றத்தைக் காரணங்காட்டி ஆலால சுந்தரருக்கும் அநிந்திதை கமலினியோருக்கும் இடமாற்றம் செய்தார்.

சிவபெருமானின் தீர்ப்புக்கு ஆலாலசுந்தரர் முறையீடு செய்தார்.

**'மையன் மானுட மாய்மயங் கும்வழி**
**ஐயனே தடுத் தாண்டருள் செய்யென.....'**

சிவபெருமான் அப்படியே ஆகுமென்று உறுதி செய்தார்.

இனி, சிவபெருமான் ஆலாலசுந்தரரை எப்படி மகன்போல் வளர்த்தெடுத்தார் என்பதைப் பார்ப்போம்.

ஆலாலசுந்தரர் திருநாவலூரில் ஆதிசைவ அந்தண குலத்தில் அவதரித்தார். ஆரூரன் என்னும் பெயர் சூட்டப்பட்டது. அநிந்திதை திருவாரூரில் கணிகைணர் குலத்தில் அவதரித்தார். பரவையார் என்னும் பெயர் அவருக்குச் சூட்டப்பட்டது. கமலினி திருவொற்றியூரில் வேளாளர் குலத்தில் அவதரித்தார். அவருக்குச் சங்கிலியார் என்னும் பெயர் சூட்டப்பட்டது. ஆரூர் மூன்றுவயது மட்டும் தாய் தந்தையருடன் வளர்ந்தார். பின்னர் அரசரின் மாளிகையில் வாழ்ந்தார். அங்கு அந்தணர் ஒழுக்கத்தையும் பேணி அரசபோகங்களையும் அநுபவிக்க அரசர் இடம் கொடுத்தார். சிவபெருமான் அநுபவிக்கவிட்ட உலக இன்பங்களில் அரண்மனை வாழ்க்கைச் சுகத்தையும் ஆரூரர் பெற்றார். பதினாறு வயதாயிற்று. அந்தக்காலத்தில் பதினாறு வயது மணப்பருவமாகும். ஆரூரரின் தாய் தந்தையரும் வளர்ப்புத் தந்தையான அரசரும் இணங்கித் திருமணம் நிச்சயித்தார்கள்.

பூலோக தொடர்பந்தம் ஆரூரரைப் பற்றக் காத்திருக்கிறது. சிவபெருமான் கொடுத்த வாக்கை நிறைவேற்றவேண்டிய தருணம் இது. அவர் அருள்கூர்ந்தார்.

திருமணப் பந்தரிலே இளவரசர் கோலத்திலே மணமகனாய் ஆரூரர் வீற்றிருக்கிறார். இன்னும் கிரியைகள் தொடங்கவில்லை. அந்த நேரம் ஒரு வயோதிப அந்தணர் ஊன்றுகோலும்

தள்ளுநடையுமாக மணப்பந்தலில் நுழைந்தார். சபை நடுவில் நின்று 'ஒரு விண்ணப்பம்' என்றார். மணமகனைப் பார்த்து, "உனக்கும் எனக்குமிடையில் ஒரு பழைய ஆவணத்தை ஒட்டிய வழக்கு இருக்கிறது. அதை முடித்தபின்தான் நீ திருமணத்தில் முயலலாம். நீ எனக்கு அடிமை" என்று கூறினார் அந்த முதிய அந்தணர். மணமகனும் சபையோரும் அவர் கூற்றை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தணர் அந்தணருக்கு அடிமையாவதில்லை. இது பொய் வழக்கு என்றார்கள். மணமகன் மேலும் "நீ பித்தனோ?" என்று கேட்டார். அந்த ஊர் நீதிமன்றுக்குப் போனார்கள். அங்கு கிழவேதியர் கொடுத்த ஆவணத்தை ஆராய்ந்த சபையோர் கிழ வேதியருக்குச் சார்பாகத் தீர்ப்புக் கூறினார்கள். ஆரூரர் கிழவேதியரைச் சார்ந்தார். இந்தப் பெரியவரின் இருப்பிடம் எங்கேயென்று கேட்டதற்கு, "காட்டுகிறேன், வாருங்கள்" என்று நடந்துபோய் கோயிலுக்குட் புகுந்தார்; மறைந்தார். ஆரூரர் மனங்கசிந்து கூவியழைத்தார். வழி தவறும் மகனைத் தந்தையார் உபாயங்கள் செய்து நல்வழிக்குத் திருப்பும் நிலையை இங்கு காண்கிறோம். ஆரூரர் கூவியழைக்கச் சிவபெருமான்

**"மாதொடு உம்பரின் மேற்றோன்றி அவர்தமக் குணர்த்தலுற்றார்"**

பார்வதி சமேதராய் இடபாரூடராய்க் காட்சி கொடுத்தார். அசரீரி வாக்குமூலம் தனது விளக்கத்தையுங் கூறி உண்மையை உணர்த்தினார் இறைவன். தாயுந் தந்தையுமாகிய இறைவரின் கோலத்தை ஆரூரர் கண்டார்.

**முன்புநீ நமக்குத் தொண்டன் முன்னிய வேட்கைகூரப்**
**பின்புநம் ஏவலாலே பிறந்தனை மண்ணின் மீது**
**துன்புறு வாழ்க்கை நின்னைத் தொடர்வறத் தொடர்ந்து வந்து**
**நன்புல மறையோர் முன்னர் நாம்தடுத் தாண்டோ மென்றார்**

**என்றெழும் ஓசைகேளா வீன்றவான் கனைப்புக் கேட்ட**
**கன்றுபோற் கதறி நம்பி கரசர ணாதி யங்கந்**
**துன்றிய புளக மாகத் தொழுதகை தலைமே லாக**
**மன்றுளீர் செயலோ வந்து வலியவாட் கொண்ட தென்றார்**

ஆரூரர் அதிசயப்பட்டுப் பலவிதமான உணர்ச்சிகளுடனும் அன்பினால் ஈர்க்கப்பட்டும் களி விரக்கப்படுகிறார். ஐயனே! பித்தனென்றேன். பழைய மன்றாடியோ (ஊர் வழக்கறிஞர்) என்றும் ஏசினேன். உன் கருணை இருந்தவாறு அதிசயம். எனக்கு நீ இனிக் காட்டும் வழி என்ன என்றெல்லாம் எண்ணி இரந்தார். இறைவர் நல்வழிக்குத் திருப்பியதோடு அவருக்கு ஒரு வேலையும் கொடுக்கிறார்.

**மற்றுநீ வண்மைபேசி வன்றொண்ட னென்னு நாமம்**
**பெற்றனை நமக்கு மன்பிற் பெருகிய சிறபின் மிக்க**
**அர்ச்சனை பாட்டே யாகும் ஆதலான் மண்மேல் நம்மைச்**
**சொற்றமிழ் பாடுகென்றார் தூமறை பாடும் வாயான்**

இப்படி இறைவன் வன்றொண்டன் என்ற பெயர் சூட்டயதை ஒரு வழியிற் பார்த்தால், எமக்கு வேடிக்கையாகவும் துக்கமாகவும் தெரிகிறது. வண்மை பேசி, வல்வழக்காடி, வலிந்து பற்றி இளைஞனைப் பார்த்து 'நீதான் வண்மை பேசினாய்' என்றால் எப்படியிருக்கும்? வன்றொண்டன் என்று பட்டப்பெயருஞ் சூட்டினால் எப்படி?

ஆனால். ஆரூரர் தனக்குக் கிடைத்த அருள் ஆசீர்வாதமாக, தீக்கை நாமமாக அதை மிக்க

மகிழ்ச்சியோடும், பெருமையோடும் ஏற்றுக்கொண்டார். அவருடைய இரண்டாவது பதிகத்திலே ஒரு பாடலில்

**"வன்மைகள் பேசிட வன்றொண்டன் என்பதோர் வாழ்வு தந்தார்"**

என்று பாடிச் சான்று தந்திருக்கிறார். பின்னும் பல பாடல்களில் "வன்றொண்டன்" என்றே தன்னைக் கூறிப் பாடினார். எனக்குப் பூசையாகச் சொற்றமிழ் பாடுக என்றார் இறைவர். ஆரூரரோ 'எப்படிப்பாடுவேன் ஐயனே? எனக்குத் தெரியாதே!' என்றார்.

**"கோதிலா அமுதே இன்றுன் குணப் பெருங் கடலை நாயேன்**
**யாதினை அறிந்தென் சொல்லிப் பாடுகென் எனப்பொ ழிந்தார்"**

இப்போ மகனுக்குப் பாடஞ்சொல்லிக் கொடுக்கிறார் இறைவர்.

**"முன்பெனைப் பித்த னென்றே மொழிந்தனை யாத லாலே**
**என்பெயர் பித்த னென்றே பாடுவாய்" என்றார்**

ஆரூரருக்கு இப்போ பாடம் வந்துவிட்டது. உணர்ந்தார். ஞானம் கைகூடிவிட்டது. தாயினும் இனிய தந்தையென்று நன்றாய் உணர்ந்து பாடினார்

**"கொத்தார் மலர்க் குழலாளொரு கூறாயடி யவர்பான்**
**மெய்த்தாயினு மினியானையவ் வியனாவலர் பெருமான்**
**'பித்தா பிறைசூடி' யெனப் பெரிதாந் திருப்பதிகம்**
**இத்தாரணி முதலாவுல கெல்லாமுய வெடுத்தார்"**

இந்தப் பாடலிலே சேக்கிழார் வைத்த சிறப்புக்களையும் பார்த்தால் சுவையாக இருக்கும். இறைவர் அம்மையப்பராய்த்தோன்றி அடியவர்க்கு அருள் கொடுப்பார். இங்கேயும் தாயுந் தந்தையுமாய் நின்று ஆரூரரை ஊக்கப்படுத்துகிறார் சிவபெருமான். மெய்த்தாயினும் இனியான் என்பதையும் ஞாபகப்படுத்துகிறார் சேக்கிழார். ஆரூரரை இவ்விடத்தில் முதன் முதலாக 'நாவலர் பெருமான்' என்றழைத்து உயர்த்தி வைத்தார். மேலும் 'உலகெலாம் முய்ய' என்றும் அமைத்த நயங் காண்க. சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் பாட இறைவர் திருச்சிற்றம்பலவர் கொடுத்த 'உலகெலாம்'என்ற இந்த ஐந்தெழுத்துச் சொல்லை அற்புதங்கள் நிகழும் இடங்களில் எல்லாம் சேக்கிழார் சிற்றம்பலவரை நினைந்து அமைத்துவிடுவார்.

இந்தப் பாட்டில் சிவபெருமான் ஆரூரருக்குப் பாடமுஞ் சொல்லி, பாடும் வேலையுங் கொடுத்து ஊக்குவித்ததைக் காண்கிறோம். இனி மேற்கொண்டு சிவபெருமான் மகனை வளர்த்து ஆளாக்கும் முறைகளைப் பார்ப்போம்.

தில்லைச் சிதம்பரத்தைத் தரசிக்க நினைப்பூட்டினார் இறைவன். அங்கு வழிபாட்டின் பின் 'ஆரூரில் வருகநம்பால்' என்ற அசரீரி அறிவித்தலை ஆரூரர் கேட்டார். விரைவாக யாத்திரையைத் தொடங்கினார். வழியிலுள்ள தலங்களையும் வணங்கிக்கொண்டு 'தென்னாவ லூராழி திருவாரூர் சென்றணைந்தார்'. சிவபெருமான் ஆரூரரைத் திருவாரூர் போகச் சொன்னதோடு அமையாமல் திருவாரூர் அர்ச்சகர் முதலிய தொண்டர்களுக்கும் கனவில் அறிவித்தார். 'நம் ஆரூரன் நாம் அழைக்க வாரா நின்றான். அவனை மகிழ்ந்தெதிர்கொள்வீர்' என்று சொன்னமை ஒரு தகப்பனுடைய பரிவல்லவா? இப்படிப் பக்குவமாய் ஆரூரரை வளர்த்தெடுக்கிறார் இறைவர்.ஆரூரருக்கு வெகு மேன்மையான வரவேற்புக் கிடைத்தது. ஆரூரர் நம்பியை இங்கே

மணமகனாக்கி இல்லறம் நடத்த வழிகோல இறைவருக்குக் கடமை இருந்தது. முன்னர் ஒழுங்குசெய்யபட்ட திருமணத்தைத் தடுத்தவர் அல்லவா? அதனால், தன் மகனை உயர்ந்தவனாக்க, பெரிய வரவேற்புச்செய்ய ஒழுங்கு செய்துவிட்டார். வரவேற்பை நம்பிகள் ஏற்றார். அந்தத் தொண்டர்கள் எல்லோரையும் வாழ்த்தி நன்றி கூறி கோயிலுட் புகுந்து வழிபட்டார். பலவகையாவும் வழிபட்டு 'இன்ப வெள்ளத்திடை மூழ்கி நன்றே இன்னிசை வண்டமிழ் மாலை பாட' அசரீரி வாக்கு ஒன்று ஆரூரருக்குக் காதில் விழுந்தது.

**"தோழமை யாக வுனக்கு நம்மைத் தந்தனம்**
**நாமுன்பு தொண்டு கொண்ட**
**வேள்வியி லன்றுநீ கொண்ட கோலம்**
**என்றும் புனைந்துநின் வேட்கை தீர**
**வாழிமண் மேல்விளை யாடுவா யென்று**
**ஆரூரர் கேட்க வெழுந்த தன்றே."**

தந்தையென்ற நிலைக்கு வேறாகத் தன்னைத் **தோழனாகவும்** தந்தேனென்றார் இறைவர். தோளுக்கு மிஞ்சினால் தோழன் எனபார்கள் நம்மவர். அதுபோல் ஆரூரரும் வளர்ந்துவிட்டார். யோகி என்ற தகுதிநிலை அடைந்து நிற்கிறார். 'நீ அடிமையில்லை. தோழன். ஒதுங்கி நிற்காதே' என்று உணர்த்துகிறார். 'தோழன்' என்றதுடன் 'விளையாடுவாய்' என்றதையுஞ் சேர்த்துப் பார்க்கலாம். ஆரூரர் நிறையப் பொன்னும் திரவியங்களும் பெற்று நன்றி பாராட்டியிருக்கிறார். கொடுக்கப் பிந்தினால் கோபித்தும் இருக்கிறார். நகைச்சுவையாகப் பாடல்கள் ஏராளமாகப் பாடியிருக்கிறார். கல்மனங் கூடக் கசியும்படியான பத்திப் பாடல்கள் ஏராளம் பாடினார். புகழ்ந்து பாடியவையும் ஏராளம் காணலாம். இறைவர் தன் பங்குக்கு ஆரூரரின் குடும்ப வாழ்க்கைக்குத் தேவையானவை எல்லாம் கொடுத்தார். குற்றங்களைக் கண்டபோது துன்புறுத்தியும் இருக்கிறார். இவை நண்பர் -தோழர்களுக்கிடையில் நடைபெறும் தீங்கில்லாத விளையாட்டுக்கள். தோழன் என்ற குறிப்பைத் தேவாரங்களில் நிறையக் காணலாம். மேலும் தோழன் என்ற தகுதியில் இறைவர் பரவையார் , சங்கிலியார் திருமணங்களைச் செய்வித்ததும், ஊடல் தீர்க்க நடந்து திரிந்ததும் நடந்த நிகழ்ச்சிகளாகும். மேலும் கோபித்துக்கொண்டிருந்த கலிக்காமரை நண்பனாக்கி வைத்தமை ஒரு தோழன் செய்யும் கடமையே.

தோழனாகத் தந்தனம் என்று வரும் இந்தப் பாடலில் வரும் 'வேள்வி' என்றது திருமணத்தைக் குறிக்கிறது. ஓமம் வளர்த்துச் செய்யும் சடங்கு. 'நான் உன்னை ஆட்கொண்ட நேரம் நீ இருந்த அலங்காரக் கோலத்துடனேயே - இளவரசன், மணமகன் கோலம் - என்றும் இருக்கலாம், எங்கும் திரியலாம்' என்று ஆறுதல் கூறுகிறார். இந்தப் பாடலில் வேட்கை என்ற சொல் வருகிறது. வேள்வி - வேட்கை, 'வேட்கை தீர்' என்றும் வருகிறது. வேட்கை என்ற சொல் ஓமம் வளர்த்து நித்திய பூசை செய்வதைக் குறிக்கும். 'வேட்கை தீர்' என்றது - உனக்கு அந்தக் கடமை இனித் தேவையில்லை. நீ என் அடியவன் ஆகிவிட்டாய். நீ மானச பூசை, அகப் பூசை செய்யலாம். பாடல்களை நிறையப் பாடு என்று ஆறுதல் சொன்னார். ஆரூரர் நிறைய யாத்திரை செய்து பல ஊர்களிலும் பலவித சூழலிலும் தங்கவேண்டிவரும். தீ வளர்த்துப் பூசை செய்யும் வசதிகள் இருக்காது. யார் கொடுத்த உணவையும் ஏற்கவேண்டிவரும். சந்நியாசம் பெற்ற எவருக்கும் இந்த ஒரு ஒழுக்க விதிவிலக்கு உண்டு.

இனி, 'வேட்கை' என்ற சொல்லை 'ஆசை' என்ற பொருளில் எடுத்தாலும் என்மேலுள்ள அன்பு எல்லாம் அநுபவித்துத் திருப்தியாய் இருக்கும் நிலையாகக் கொள்ளலாம். மண்ணின்மேல் விளையாடுதல் - பூவுலகில் புண்ணிய பாவங்கள் செய்யவேண்டி ஏற்படும். அந்தப் பயன் மறு பிறவிகளுக்குக் காரணமாகும். அப்படிக் கறைபடாமல் சிவ புண்ணியங்களைச் செய்துகொண்டும்,

இப்பிறவி துன்பமல்ல; இதுவே இன்பம்; இது போதுமென்றும் திருப்திப்பட்டு வாழும் குறிப்பு இந்தப் பாடலில் இந்தக் கருத்துக்களைத் திருவாரூர்த் தியாகேசர் பெருமான் ஆரூரருக்குக் கூறினார் அசரீரியாக. தியாகேசர் ஆரூரரின் இல்லற இன்பத்தைப்பற்றி இவ்விடத்திற் சொல்லவில்லை. ஏனென்றால் அது இன்னும் நேரவில்லை. சொல்லவேண்டிய தேவையுமில்லை. கயிலாயத்தில் நந்தவனத்தில் நடந்த காட்சியின் பயனைக் கயிலாயபதி அங்கேயே ஆலாலசுந்தரருக்குச் சொல்லிவிட்டார்.

**"மாதர்மேல் மனம் வைத்தனை தென்புவிமீது தோன்றி அம்மெல்லியலாருடன் காதலின்பம் கலந்தடைவாயே"**

இனித் தந்தையென்ற நிலையில், ஒரு திருமணத்துக்குப் பதிலாக இரண்டு திருமணங்கள் செய்துவைத்தார். பரவையாரையும் (அநிந்திதை) சங்கிலியாரையும் (கமலினி) கூட்டிவைத்தார். கயிலையிற் கொடுத்த வாக்கை நிறைவேற்றினார்.

சேரமான்பெருமாள் நாயனார் முடிவேந்தர். அவர் ஆரூரரைத் தேடிப்பொய் நட்புக் கொள்ளும்படி வைத்தார். பின்னாளில் இருவரையும் ஒருசேரத் திருக்கயிலாயத்துக்கு அழைத்தார்.

பாண்டிநாட்டிலே மூவேந்தர்களுடனே கூடிச் சில தலங்கள் யாத்திரை செய்து பெருமைப்பட வைத்தார். ஆரூரர் முன்னாகவும் மன்னர் பின்னாகவும் கூடிச்சென்று வணங்கிய சிறப்பைக் காண்கிறோம்.

முடிவாக, ஆரூரர் சேரர் அரண்மனையில் இருக்கும்போதே கயிலைக்குத் திரும்பவேண்டிய காலம் கனிந்தது என்று உணர்ந்தார். அவருடைய அவதாரத்தின் நோக்கம் நிறைவேறிய காலமும் அவர் சரித்திரம் நிறைவாகும் நேரமும் இணைந்தன. திருவஞ்சைக்களத்திலே கோயிலில் இறைவர் முன் நின்று கயிலாயபதிக்கு, 'ஐயனே! இவ்வுலகினிற் பாசமடுத்த வாழ்க்கையை அறுத்திடவேண்டும்' என்று விண்ணப்பித்தார். இறைவர் கயிலாயபதியும் உரிய காலம் இதுவென்று உணர்ந்து, 'ஒன்று சிந்தை நம் மூரனை உம்பர் வெள்ளானையுடன் ஏற்றிச் சென்றுகொண்டிங்கு வாருமென்று அயன்முதற் தேவர்'களுக்கு அருள்செய்தார்.

தத்தெடுத்து வளர்த்த மன்னன் ஆனபடியாலும் முன்னயை அணுக்கத்தொண்டன் ஆனபடியாலும் சுந்தரமூர்த்தி நாயனாருக்கு இவ்வளவு பெருமைகள் செய்தார் கயிலாயபதி. ஆரூரர் யானையில் ஏறும்போது நண்பர் கழறிற்றறிவாரை நினைந்தார். கழறிற்றறிவார் உடனே உணர்ந்து குதிரையைச் செலுத்தி ஆகாயத்தில் பறந்து நண்பருடனே கூடித் திருக்கயிலாயம் சேர்ந்தார். சுந்தரமூர்த்தி நாயனார் பூமியை விட்டு ஆகாயத்தில் போகும்போது திருப்பதிகம் ஓதிக்கொண்டே போனார். 'தானெனை முன்படைத் தான்..' என்று தொடங்கும் பதிகம் அது. 'தானெனை முன்படைத்தான்' என்பது நாயனாருடைய பிறவி பிரமன் படைத்தது அன்று, இறைவன் நேரிற் படைத்தது என்பது. இந்தப் பதிகம் நாயனாரின் சரிதத்துக்கு வலுவான சான்று.

**தானெனை முன்படைத்தான் அதறிந்துதன் பொன்னடிக்கே**
**நானென பாடலந்தோ நாயினேனை பொருட்படுத்து**
**வானனை வந்தெதிர் கொள்ள மத்தயானை அருள்புரிந்து**
**ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலை உத்தமனே**

இறைவன் என்னைத் திருநாவலூரில் பிறக்கப்படைத்தான். என்னை ஆட்கொண்டு தன்னைப் பாடச்சொன்னான். பாடினேன். அப்படி என்னதான் பெரிதாகப் பாடிவிட்டேன்? இருந்தும்

திருவைஞ்சைக்களத்தில் நான் பாடியதற்கு இரங்கி தேவர்களையும் வெள்ளை யானையும் அனுப்பி என்னை மேலே உயர்த்தி என் பசுகரணங்களைப் பதிகரணங்களாக்கி உன் அருள் ஒளியில் அடங்கச் செய்தாய். இப்பதிகத்தின் ஐந்தாவது பாடலில் 'என்னுடல் காட்டுவித்தான்' என்கின்றமையால் நம்பிகள் இவ்வுலகில் சனித்த திருவுடம்புடனே கயிலைக்குச் சென்று அங்கு வீற்றிருக்கின்றார் என்பது உண்மை. இதுபற்றியே

**ஞானவா ரூரரைச் சேரரை அல்லது நாமறிவோம்**
**மானவ யாக்கையொடும் புக்கவரை வளரொளிப்பூண்**
**வானவ ராலும் மருவற்கரிய வடகயிலைக்**
**கோனவன் கோயில் பெருந்தவத்தோர் தங்கள் கூட்டத்திலே**

திருத்தொண்டர் திருவந்தாதி 86

**சென்று கண்ணுதல் திருமுன்பு தாழ்ந்து வீழ்ந்து எழுந்துசே ணிடைவிட்ட**
**கன்று கோவினைக் கண்டணைந் ததுவெனக் காதலின் விரைந்தெய்தி**
**நின்று போற்றிய தனிப்பெருந் தொண்டரை நேரிழை வலப்பாகத்து**
**ஒன்று மேனியர் 'ஊரனே வந்தனை' என்றனர் உலகுய்ய**

நெடுங்காலம் தாய்ப்பசுவைப் பிரிந்திருந்த கன்று தாயைக் கண்டு விரைவாய் வந்தணைந்து அன்புகாட்டி அன்பு பெறுவதுபோல் நாயனார் இறைவர் திருமுன்பு வீழ்ந்தார்., தேம்பித் தேம்பி அழுதார், எழுந்தார், போற்றினார். வெகுகாலம் நாளும் பொழுதும் மகனை எதிர்பார்த்திருந்த தந்தைபோல இறைவரும் 'ஊரனே வந்தனை' என்றார். ஆரூரனே வந்துவிட்டாய் அல்லவா? என்றார். திருப்தியாக, மகிழ்ச்சியாக 'ஊரனே' என்றே அழைத்தார். சுந்தரனே!, ஆலால சுந்தரனே! என்று அழைத்தாரில்லை. ஊரன், ஆரூரன் என்பவை பூலோகத்தில் விளங்கிய பெயர்கள். பூலோக உடலுடன் நாயனார் நிற்பது விளங்குகிறது அல்லவா?

நாயனாருடைய கடைசிப் பதிகம் ஐந்தாவது பாடலில்

**'விண்ணுலகத்தவர்கள் விரும்ப வெள்ளை யானையின்மேல்**
**என்னுடல் காட்டுவித்தான் நொடித்தான் மலை உத்தமனே'**

என்று பாடினார். பச்சைக் கூட்டோடு கயிலாயம் போனதும் அப்படியே அங்கு தரித்ததும் உண்மை. இந்தச் செய்தி நம்மவர்களுக்கு நிறையத் தெரிந்திருக்கிறது. சிறு வயதில் இந்தப் பேச்சை நிறையக் கேட்டிருக்கிறேன்.

இன்னும், சேக்கிழார் பாடலில் வேறு சிறப்புக்களும் உள்ளன. 'ஊரனே உலகுய்ய வந்தனை' என்றார் இறைவர். உலகுய்ய - உன்னால் உலகம் நல்ல பயனை அடைந்து வாழ்ந்துகொண்டிருக்கச்செய்து, கண்டு வந்திருக்கிறாய். நேரிழை வலப்பாகத்தொன்றும் மேனியர் இப்படிச் சேக்கிழார் அழைத்தது அருட்சத்திக் குறிப்பு. அம்மையின் அருள் வெளிப்பாடு.

சேக்கிழாருடைய அடுத்த பாடலிலும் 'மலர்ந்தனர் வன்தொண்டர்' என்ற குறிப்பிடுகிறார். 'வன்தொண்டர்' பூலோக கோலத்தில் நின்ற பெயர்.
இறைவர் ஆரூரரை அணுக்கத்தொண்டராய் ஏற்றுக்கொண்டார். ஆரூரரும் அங்கு கடமை செய்துகொண்டிருக்கிறார்.

***

# TEMPLE STEPS

C.Vedanarayanan

Temples are built in all conceivable places .... In the plains, seafronts, hills, towns and forests etc. In the plains these are built without elevation ( no need to have steps to climb.. like Keerimalai ), or built on plinths ( short elevation... like Ketheeswaram) or having number of steps ( maadakkovil... like Thiruveezhimizhalai). Chozha temples like Thanjavur, Gangai konda chozhapuram, Tarasuram etc. have also been built in an elevated positions. These Chozha temples are not called madakkovils ( though they are ) since Kochchengan's temples alone got the epithets.


So it became necessary to have steps to go up and down...This is a write up on the kinds of steps that I have seen in various temples.

Modern temples may have steps to climb up...These have stainless steel hand rails to facilitate climbing. In the olden times steps existed without protective means..Personally I need someone's help to negotiate these..."Then Thirumullaivayil" temple is an example..

In some temples these steps have protective walls on either side...Lalgudi temple...



Then Thirumullaivayil



Lalgudi

In some old temples the protective walls are plain ie without decorations.



Kodumbalur



Virinchipuram

In some temples these side protectors are decorated.. These can be sculptures of elephants.



Sriperumbudur Perumal kovil



Thanjavur

The sculptures of just Yali with its trunk curved and the yali looking back are usually seen.



Kalakkadu



Sevilimedu

These yali sculptures may have extra figures as well



Devikapuram



Thanjavur

In few temples the stones have been drilled to make these three dimensional



Nedungunam



Tirunelveli

In some temples lions and other animals grace these steps



Tharasuram
( A warrior rides a yali )



Tharasuram
( Lion attacking elephant )

There are more elaborate sculptures adorning the steps. You can find these in Thiruvannamalai, Thanjavur, Tharasuram etc.

# நாள் என்செயும்? கோள் என்செயும்?

-அநுஜா-

சோதிடக்கலை இன்று மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கைப் பெற்றுவருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இதற்கு, கடவுள் நம்பிக்கை மக்களிடம் குறைந்து வருவதுதான் காரணமோ என்று எண்ணத் தோன்றுகிறது. இதை உறுதிப்படுத்துகிறது திருஞானசம்பந்தரின் கோளறுபதிகம். உலகத்தில் எவையெல்லாம் எமக்குத் தீங்குசெய்யும் என்று அஞ்சுகிறோமோ, “அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே” எனப் பத்துத் தேவாரங்கள் மூலம் எடுத்தியம்பு கிறார் திருஞானசம்பந்தர். ஏனெனில் இறைவன் அடியார் மனதில் அமர்ந்திருக்கிறான். ‘இறை வனோ தொண்டருள்ளத் தொடுக்கம், தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே!’ என ஔவையார் தனது பாடல் ஒன்றில் குறிப்பிடுவதையும் இங்கு நினைவு கூரலாம்.

ஞானசம்பந்தர் கோளறுபதிகம் பாடிய சந்தர்ப்பத்தையும் இங்கு குறிப்பிடுதல் அவசியம். மது ரையில் மங்கையர்க்கரசியார் தம் கணவரான பாண்டிய மன்னர் நின்றசீர் நெடுமாறன் சமண மதத்தில் ஈடுபடுவது கண்டு மனம்வருந்தினார். மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சி றையாரும் இதுபற்றி வருந்தி என்ன செய்து மன்னனைத் திரும்பவும் சைவ சமயத்துக்குக் கொண்டுவரலாம் என்று சிந்தித்தனர். அப்போது, திருஞானசம்பந்தர் பெருமைகளைக் கேள்விப்பட்டு அவரை மதுரைக்கு அழைக்க விரும்பினர். சம்பந்தரின் உதவியுடன் மன்னனை மாற்றலாம் என்று முடிவுசெய்தனர். அச்சமயம் திருஞானசம்பந்தர் அப்பர் பெருமானுடன் திருமறைக்காட்டிலே தங்கியிருந்தார். எனவே அவருக்குத் தூது அனுப்பினர்.

அடியார்கள் பலரின் குறைகளை (துன்பங்களை) தீர்த்துப் பல அற்புதங்களை நிகழ்த்தி வந்துகொண்டிருந்த சம்பந்தர் இந்த அழைப்பையும் ஏற்றுப் புறப்படத் தயாரானார். அங்கே கூட இருந்த அப்பர் ‘நீரோ வயதில் இளையவர். உமக்குக் கிரகநிலை இப்போது சரியாக இல்லை. சமணர்களோ கொடியவர்கள். அவர்களால் உமக்குத் தீங்கு ஏற்படலாம். அங்கு போவது நல்லதன்று’ என்று தடுக்கிறார். அதற்குச் சம்பந்தர் தந்தையாகிய சிவன் பார்வதியுடன் என்னுள்ளத்தே எழுந்தருளியிருக்கிறார். அதனால் எனக்கு ஒரு கெடுதலும் ஏற்படாது. தீங்கு செய்யக்கூடிய கிரகங்களோ,கொடிய விலங்குகளோ, அரக்கர்களோ, தேவர்களோ நோய்களோ எனக்கு மட்டுமல்ல இறையடியார்கள் அனைவருக்குமே கெடுதல் செய்யா; நல்லவற்றையே செய்யுமெனப் பத்துத் தேவாரங்கள் மூலம் எடுத்துரைக்கிறார்.

**வேயுறு தோளிபங்கள் விடமுண்ண கண்டன்**
**மிகநல்ல வீணை தடவி**
**மாசறு திங்கள் கங்கை முடிமே ணிந்தென்**
**உளமே புகுந்த அதனால்**
**ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியா ழம்வெள்ளி**
**சனிபாம் பிரண்டு முடனே**
**ஆசறு நல்லநல் அவைநல்ல நல்ல**
**அடியாரவர்க்கு மிகவே**

மூங்கில் போன்ற தோள்களை உடைய உமாதேவியாரைத் தன் இடப்பாகத்தே கொண்டவரும், பாற்கடலைத் தேவர்களும் அசுரர்களும் அமுதம் பெறக் கடைந்தபோது எழுந்த நஞ்சை உண்டதால் நீலநிறமான கழுத்தை உடையவரும் சிறந்த வீணையை மீட்டி அபயம் கேட்ட சந்திரனையும் கங்கை நதியையும் தலையிற் சூடியவருமான சிவன் என் உள்ளத்திலே குடி கொண்டுள்ளார். அதனால் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனீச்சரன், ராகு, கேது ஆகிய ஒன்பது கிரகங்களும் எனக்கு நன்மையே செய்யும் இறையடியார்களுக்கும் நன்மையே செய்யும்.

**என்பொடு கொம்பொ டாமை யிவைமார் பிலங்க**
**எருதேறி யேழை யுடனே**
**பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்**
**உளமே புகுந்த வதனால்**
**ஒன்பதொ டொன்றோ டேழு பதினெட்டொ டாறும்**
**உடனாய நாள்கள் அவைதாம்**
**அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல**
**அடியாரவர்க்கு மிகவே**

எலும்புகளுடன், திருமால் பன்றியாக அவதரித்தபோது அதனின் கொம்பையும், ஆமையாக அவதரித்தபோது அதன் ஓட்டையும் எடுத்து தன் மார்பில் மாலையாக அணிந்தவரும் பொன்னிறமான ஊமத்தைப் பூமாலையையும் கங்கையையும் தலையில் அணிந்தவரும் பார்வதி தேவியைத் தன் இடப்பாகத்தே கொண்டவருமான சிவன் என் உள்ளத்தே புகுந்து அமர்ந்திருக்கிறான். ஆனபடியால் ஆயிலியம் எனும் ஒன்பதாவது நட்சத்திரமும் விசாகம் எனும் பதினாறாவது நட்சத்திரமும் கேட்டையெனும் பதினெட்டாவது நட்சத்திரமும் திருவாதிரையெனும் ஆறாவது நட்சத்திரமும் ஏனைய அசுவினி தொடங்கி ரேவதி வரை ஏனையவையும் எனக்கு நன்மையே செய்யும் இறையடியார்க்கும் நல்லதையே செய்யும்.

**உருவளர் பவளமேனி ஒளிர்நீ றணிந்து**
**உமையோடும் வெள்ளை விடைமேல்**
**முருகலர் கொன்றை திங்கள் முடிமே லணிந்தென்**
**உளமே புகுந்த வதனாற்**
**றிருமகள் கலைய தூர்தி சயமா துபூமி**
**திசைதெய்வ மான பலவும்**
**அருநெதி நல்லநல்ல அவை நல்லநல்ல**
**அடியாரவர்க்கு மிகவே**

பவளம் போன்ற நிறங்கொண்ட தன் உடலில் ஒளிவீசும் திருநீற்றை அணிந்துள்ளார். காளை (எருது) வாகனத்தில் உமையம்மையுடன் வீற்றிருக்கின்றார். நறுமணங்கமளும் கொன்றை மலர் மாலையையும் பிறைச் சந்திரனையும் தலையிற் சூடியிருக்கும் இறைவன் என் உள்ளத்தே அமர்ந்திருக்கின்றான். அதனாலே இலக்குமி, துர்க்கை, ஜெயலட்சுமி பூமாதேவி எட்டுத்திசை காக்கும் தேவர்கள் யாவரும் எனக்கு நல்லதையே செய்யும் நல்ல தெய்வங்கள் ஆவார்கள். சிவனடியார்கள் எல்லோருக்கும் நல்லவர்களே. நன்மையே செய்வார்கள்.

**மதிநுதன் மங்கையோடு வடபா லிருந்து**
**மறையோது மெங்கள் பரமன்**
**நதியொடு கொன்றை மாலை முடிமே லணிந்தென்**
**உளமே புகுந்த வதனாற்**
**கொதியுறு கால னங்கி நமனோடு தூதர்**
**கொடுநோய்க ளான பலவும்**
**அதிகுண நல்லநல்ல அவை நல்லநல்ல**
**அடியாரவர்க்கு மிகவே**

பிறைச் சந்திரன்போன்ற நெற்றியை உடைய உமையம்மையோடு அமர்ந்திருப்பவன், ஆலின் கீழமர்ந்து சனகர் முதலான முனிவர்களுக்கு வேதத்தை உபதேசித்தருளியவன், தலையிலே கங்கையையும் கொன்றை மலரையும் அணிந்தவண்ணம் என் உள்ளத்தில் விரும்பி வந்து குடியேறியுள்ளான் எம்பிரானாகிய இறைவன். அதனால், கோபம் மிகுந்த காலன், அக்கினி, இயமனுடைய தூதர்கள், கொடுநோய்களைத் தரக்கூடிய சிறு தெய்வங்கள் எவையுமே எனக்கு தீங்கு செய்யாது நன்மையே செய்யும். இறையடியார்களுக்கும் இவை நன்மையே செய்யும்.

**நஞ்சணி கண்ட னெந்தை மடவாட னோடு**
**விடையேறு நங்கள் பரமன்**
**துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமே லணிந்தென்**
**உளமே புகுந்த வதனால்**
**வெஞ்சின வவுணரோடு முருமிடியு மின்னும்**
**மிகையான பூத மவையும்**
**அஞ்சிடு நல்லநல்ல அவை நல்லநல்ல**
**அடியாரவர்க்கு மிகவே**

நஞ்சை உண்டதால் நீலநிறக் கழுத்தையுடைய என் தந்தையாகிய இறைவன் உமாதேவியாரைப் பாகத்தே கொண்டு எருது வாகனத்தில் அமரும் எங்கள் பெருமான் கருநிறமான வன்னி இலை யையும் கொன்றை மாலையையும் தலையிற் சூடியவன் என் உள்ளத்திலே இருப்பதனால் கடுங்கோபம் கொள்ளும் அசுரர்கள், அச்சம் (பயம்) தரும் இடி மின்னல், பெரிய பூதங்கள் யாவும் என்னைக்கண்டு பயந்தோடும். இறையடியார்களுக்கும் நன்மையே செய்யும்.

**வாள்வரி யதளதாடை வரிகோ வணத்தர்**
**மடவாட னோடு முடனாய்**
**நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்**
**உளமேபுகுந்த வதனால்**
**கோளரி யுழுவை யோடு கொலையா னைகேழல்**
**கொடுநாக மோடு கரடி**
**ஆளரி நல்லநல்ல அவை நல்லநல்ல**
**அடியாரவர்க்கு மிகவே**

சிவபெருமான் வரிந்து கட்டிய கோவணத்துடன் வரிகளுடைய புலித்தோலை ஆடையாக அணிந்தவர். அன்றலர்ந்த மலர்களுடன் வன்னி இலையையும் கங்கையையும் தலைமேலணிந்து உமையம்மையோடு என் உள்ளத்திலே அமர்ந்து இருப்பதனால் சிங்கம் புலியோடு பன்றி யானை கொடிய நாகம் கரடி போன்ற எவையுமே எனக்குத் துன்பம் செய்ய மாட்டா. நல்ல அடியவர்களுக்கும் அவை நன்மையையே செய்யும்.

**செப்பிள முலைநன் மங்கை யொருபாக மாக**
**விடையேறு செல்வ னடைவார்**
**ஒப்பிள மதியுமப்பு முடிமே லணிந்தென்**
**உளமே புகுந்த வதனால்**
**வெப்பொடு குளிரும் வாத மிகையான பித்தும்**
**வினையான வந்து நலியா**
**அப்படி நல்லநல்ல அவை நல்லநல்ல**
**அடியாரவர்க்கு மிகவே**

செப்புப் போன்ற இளம் தனங்களையுடைய அழகிய மங்கையான உமாதேவியாரைப் பாகமாகக் கொண்டு இடபத்தில் அமர்ந்திருக்கும் இறைவன் தன்னைப் பூசிப்போருக்கு அடைக்கலம் தருபவன். இளம் பிறைச் சந்திரனையும் கங்கையையும் தலையிலே சூடியிருப்பவனாகிய இறைவன் என் உள்ளத்தே புகுந்துகொண்டுள்ளான். ஆகவே வெப்புநோய், குளிர்சுரம், வாதம், பித்தம் போன்ற நோய்களும் தீவினையும் வந்து என்னை வருத்தமாட்டா. அவை எனக்கு நன்மையே செய்யும். இறையடியார்களுக்கும் அவ்வண்ணமே செய்யும்.

**வேள்பட விழிசெய் தன்று விடைமே லிருந்து**
**மடவாட னோடு முடனாய்**
**வாண்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தென்**
**உளமே புகுந்த வதனால்**
**ஏழ்கடல் சூழிலங்கை யரையன்ற னோடும்**
**இடரான வந்து நலியா**
**ஆழ்கடல் நல்லநல்ல அவை நல்லநல்ல**
**அடியாரவர்க்கு மிகவே**

முன்னொருகாலத்திலே சிவபெருமான் தவம் செய்தபோது மன்மதன் அவரது தவத்தைக் கலைக்கும்படி மலரம்பை ஏவினான். அப்போது சிவனின் நெற்றிக்கண்ணிலிருந்து கிளம்பிய தீப்பொறி பட்டு மன்மதன் சாம்பரானான். பின்பு அவனுடைய மனைவியின் வேண்டுதலுக்கிணங்க மன்மதனை உயிர்ப்பித்த கருணை மிகுந்த இறைவன் ஒளிநிறைந்த பிறைச்சந்திரன் கொன்றை மாலை வன்னியிலை ஆகியவற்றைத் தலையிலே சூடி இளமைமிகு பார்வதியுடன் இடபவாகனத்தில் அமர்ந்து என் உள்ளத்தே புகுந்துகொண்டான். அதனால் ஏழ்கடலாற் சூழப்பட்டிருக்கும் உலகத்தில் இலங்கையை ஆட்சிசெய்த இராவணன் போன்ற அரக்கர்களோ ஆழ்கடலோ எனக்குத் துன்பம் செய்யமாட்டா. நன்மையே செய்யும். அதுபோல இறையடியார்களுக்கும் நன்மையே செய்யும்.

**பலபல வேடமாகும் பரனாரி பாகன்**
**பசுவேறு மெங்கள் பரமன்**
**சலமக ளோடெருக்கு முடிமேலணிந்தென்**
**உளமே புகுந்த வதனால்**
**மலர்மிசை யோனுமாலு மறையோடு தேவர்**
**வருகால மான பலவும்**
**அலைகடன் மேருநல்ல அவை நல்லநல்ல**
**அடியாரவர்க்கு மிகவே**

எங்கள் சிவபெருமான் இடபவாகனத்தில் ஏறி வருபவர் அடியார்களுக்கு அருள்புரியவெனப் பலவித வேடங்களைத் தாங்குபவர். உமாதேவியாரைத் தன் இடப்பாகத்தே கொண்டவர். கங்கை நதியுடன் எருக்கம் பூவையும் தன் சடையிலே சூடியவர். என் உள்ளத்தே அவர் குடி-கொண்டிருப்பதனால், தாமரை மலர்மேல் அமரும் பிரமனும் மகாவிஷ்ணுவும் நான்கு வேதங்களும் தேவர்களும் சுழன்றோடும் காலங்களும் கடல்களும் மகாமேரு மலையும் ஆகிய அனைத்தும் எனக்கு நன்மையே செய்யும். அடியார்களுக்கு அவை என்றும் நன்மையே செய்யும்.

**கொத்தலர் குழலியோடு விசயற்கு நல்கு**
**குணமாய வேட விகிர்தன்**
**மத்தமு மதியுநாக முடிமே லணிந்தென்**
**உளமே புகுந்த வதனால்**
**புத்தரொ டமணைவாதி லழிவிக்கு மண்ணல்**
**திருநீறு செம்மை திடமே**
**அத்தகு நல்லநல்ல அவை நல்லநல்ல**
**அடியாரவர்க்கு மிகவே**

மலர் மாலையணிந்த கூந்தலையுடைய உமையாளைப் பாகமாக் கொண்ட இறைவன் அருச்சுனன் முன்னால் வேடன் உருவில் வந்து காட்சிகொடுத்து அவனுக்குப் பாசுபதத்தைக் கொடுத்தவன். ஊமத்தம் பூவையும் சந்திரனையும் பாம்பையும் தலைமீது அணிந்தவன். அந்த இறைவன் என் உள்ளத்தே புகுந்தமையால் புத்தர்களையும் சமணர்களையும் வாதில் வெல்லவைக்கும் இறைவனின் திருநீறு எனக்கு என்றும் வெற்றியைத் தரும் என்பது உறுதி. அதனால் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை. எல்லாமே நன்மை தருவதன்றித் தீங்கு விளையா. அடியார் அனைவருக்குமே நன்மையுண்டு; ஆண்டவன் துணையுண்டு என்று பத்துத் தேவாரங்கள் மூலம் அப்பருக்கு இறைவன் பெருங்கருணையை விதந்துரைக்கிறார் திருஞானசம்பந்தர். பின்பு அவர் பாண்டிநாடு சென்றதும் கூன்பாண்டியனின் வெப்புநோயைக் குணமாக்கி அவனைச் சைவனாக்கியதும் சமணரை வாதில் வென்றதும் அனைவரும் அறிந்த வரலாறே.

**தேனமர் பொழில்கொ ளாலை விளைசெந் நெல்துன்னி**
**வளர்செம் பொனெங்கு நிகழ**
**நான்முக னாதியாய பிரமா புரத்து**
**மறைஞான ஞான முனிவன்**
**தானுறு கோளுநாளு மடியாரை வந்து**
**நலியாத வண்ண முரைசெய்**
**ஆனசொன் மாலையோது மடியார்கள் வானில்**
**அரசாள்வ ராணை நமதே!**

இந்தக் கோளறுபதிகத்தை நாள்தோறும் ஓதி வழிபட்டால் என்ன வரும் என்பதை பதினொராவது தேவாரத்தில் சம்பந்தர் பாடிவைத்துள்ளார். அடியார்கள் வானில் அரசாள்வர். இது உறுதி என்று முடிக்கிறார்.

'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்', 'அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்சவருவதும் இல்லை' என்பனபோன்ற அப்பரின் அருள்வாக்குகக்களும் இறைவனை இறைஞ்சுவதால் அஞ்சாமை வரும் என்று கூறுவதை மனத்திலே சிந்திக்கவேண்டும். நம்பினார் கெடுவதில்லை நான்கு மறைத் தீர்ப்பு. நம்பி வழிபடுங்கள் நலமுற வாழலாம்.



# சிவயோகம் SIVAYOGAM

(Charity Reg No: 1050398 Since: 1995)

To facilitate here and beyond



## அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில்

# பௌர்ணமிப் பூசை PURNIMA POOJA

**மூல அம்மன்**

**காலை**

9.30 மணிக்கு - சங்கல்பம்

10.00 மணிக்கு - சிறப்பு அபிசேகம்

12.00 மணிக்கு - சிறப்புப் பூசை

**எழுந்தருளி அம்மன்**

**மாலை**

5.00 மணிக்கு - அபிசேகம்

6.30 மணிக்கு - ஸ்ரீ சக்ர பூசை

7.30 மணிக்கு - சிறப்புப் பூசை (தங்க ரதம்)

## 11 வகையான அபிசேகப் பொருட்கள் மற்றும் பலன்கள்

1. மஞ்சட் பொடி – லட்சுமி கடாக்ஷம் ஏற்படும், மனம் நிம்மதி பெறும், திருமணம் நடைபெறும்.
2. திருமஞ்சனப் பொடி – அரசாங்கம் சம்பந்தமாக உள்ள செயல்கள் வெற்றி அடையும், நல்ல வேலை கிடைக்கும், வியாபாரத்தில் இலாபம் கிடைக்கும்.
3. பச்சரிசி மா – கடன் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையும்.
4. பஞ்சாமிருதம் – குடும்பங்களில் ஒற்றுமை ஏற்படும்
5. தேன் – கல்வி, ஞானம், நல்ல சிந்தனை ஏற்படும்.
6. பால் (சகஸ்ர தாரை) – நவகிரஹ தோஷங்கள் குறையும், பாபங்கள் குறையும், நீண்ட ஆயுள் தரும்.
7. தயிர் – தோஷங்கள் நீங்கி குழந்தைப் பேறு உண்டாகும்.
8. பழச்சாறு – எதிரிகள் மனம் மாறுவார்கள், கண் திருஷ்டிகள் குறையும், கெட்ட கனவுகள் வருவது குறையும்
9. இளநீர் – நோய்கள் குணமாகும், ஆரோக்கியமான வாழ்வு உண்டாகும்.
10. சந்தனம் – செல்வச் செழிப்பு ஏற்படும், பேர், புகழ் ஏற்படும்.
11. பன்னீர் – தெய்வ சிந்தனை ஏற்படும், வேண்டும் நல்ல காரியங்கள் நிறைவேறும்.

கும்ப அபிஷேகம் – 16 வகையான செல்வங்கள் வந்து சேரும்.

## 2016 பௌர்ணமித் தினங்கள் — 2016 PURNIMA DAYS

| | | |
|---|---|---|
| 19/07/2016 | Tuesday | ஆடி |
| 17/08/2016 | Wednesday | ஆவணி |
| 16/09/2016 | Friday | புரட்டாதி |
| 15/10/2016 | Saturday | புரட்டாதி |
| 14/11/2016 | Monday | ஐப்பசி |
| 13/12/2016 | Tuesday | கார்த்திகை |
| 11/01/2017 | Wednesday | தை |
| 10/02/2017 | Friday | மாசி |
| 12/03/2017 | Sunday | பங்குனி |
| 10/04/2017 | Monday | சித்திரை |
| 10/05/2017 | Wednesday | வைகாசி |
| 08/06/2017 | Thursday | ஆனி |

**காலைப் பூசை குடும்பத்திற்கு £10 - Morning pooja per family £10**

**மாலை தனி பூசை உபயம் £150**

**பௌர்ணமிப் பூசைகளில் கலந்து கொண்டு அம்மன் அருள் பெற வேண்டுகிறோம்.**

**Temple Phone Number: 020 8767 9881**


Banana Leaf
taste with tradition
அனைத்து விழாக்களுக்கும் உணவு,
பலகார வகைகளும் செய்து கொடுக்கப்படும்.
Tel: 020 8554 4120
Mob: 07969 972 202
Web: www.bananaleafuk.com
Email: info@bananaleafuk.com
4 Central Parade, Ley Street, Ilford , Essex IG2 7DE
We do cater for :
Wedding
Puberty Ceremony
Birthday &
Arangetram Etc.


Veena's
CASH & CARRY
Quality! Variety!! Satisfaction!!!
Veena's
at
BARKINGSIDE
020 8550 2700 • www.veenas.com

# பொன்மாலை வேளை 2016


சைவ முன்னேற்றச் சங்கம் (U.K)
நால்வர் மூத்தோர் நிலையம்
பொன்மாலை வேளை - 2016


வேளை - 2016


சைவ முன்னேற்றச் சங்கம் [UK]
SAIVA MUNNETTA SANGAM [UK]

# திருநாவுக்கரசர் குருபூசை





# பெரியபுராணம் தொடர் சொற்பொழிவு






# Satash Community Care









உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அநுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**Orchid Bungalow**
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
Adult Services 01708 850555

**Jasmine Bungalow**
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
Children Services 01708 851189

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
Adult Services 01708 856592


**Trinity Community Centre**
East Avenue, London E12 6SG
Domicilary Care 0203 200 1047

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com


GOSHIN ISSHIN-RYU KARATE ASSOCIATION
LONDON - UK
SEISHINKAN
GOSHIN ISSHINRYU KARATE
SENSEI M. RAMATHAS
TRAINED BY MICHAEL CALANDRA
THE FIRST AUTHORISED INSTRUCTOR IN THE UNITED KINGDOM OF
ISSHINRYU WORLD KARATE ASSOCIATION
OKINAWA - JAPAN
Michael Calandra
8th Dan, Kyoshi-Go
Isshin-Ryu Karate - Do
NEW YORK - USA
Tel: 001 917 667 0739
Email: oikddojo@aol.com
www.isshinryukarate.com
Other Branches: Gants Hill, Ilford Lane, East Ham, Catford, Chadwell Heath, Sutton, Ley Street
Contact: Incharge & Instructor, Sensei M Ramathas Tel: 07958 010 139
M Ramathas
4th Dan
Isshin-Ryu Karate - Do
LONDON - UK
0044 07958 010 139
Email: goshinissinryukarate@gmail.com
www.goshinisshinryukarate.com


your choice is CLEAR!
invisalign
Come to Bluebell for..
INVISIBLE TOOTH STRAIGHTENING
GUM DISEASE TREATMENT
COSMETIC DENTISTRY
SMILE MAKEOVERS
GENERAL DENTISTRY
ORAL SURGERY & IMPLANTS
ENDODONTICS
CHILDREN'S ORAL HEALTH
EMERGENCY APPOINTMENTS
FACIAL REJUVENATION
Book your FREE consultation today!
Bluebell is an Invisalign® Platinum Elite Provider.
If you have teeth that stick out, are crooked, have gaps or overlap then Invisalign is the best choice for you with clear, almost invisible braces.
Dr Suki Kanagasabai-Shakthi is one of the leading Invisalign® dentists in the UK. With her unique approach to an ethical and non-evasive path of treatment she has become an Invisalign® Platinum Elite Dentist, a title which is only held by a privileged few dentists in the UK.
Bluebell
dental practice & clinic
Making a Difference
CHIGWELL
020 8500 6789
STRATFORD
020 8555 1144
www.bluebelldp.co.uk
YouTube

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

# விசேட தினங்கள்

**ஜுலை (10--07-2016) தொடக்கம் ஒக்டோபர் (14-10-2016) வரை**

| | | |
|---|---|---|
| 02.08.2016 | செவ்வாய் | ஆடி அமாவாசை |
| 09.08.2016 | செவ்வாய் | சுந்தரர் குருபூசை |
| 21.08.2016 | ஞாயிறு | சைவ முன்னேற்றச் சங்கம் ஆரம்பநாள் |
| 04.09.2016 | ஞாயிறு | ஆவணிச் சதுர்த்தி |
| 15.09.2016 | வியாழன் | நடேசர் அபிஷேகம் |
| 01-10-2016 | சனி | நவராத்திரி ஆரம்பம் |
| 09.10.2016 | ஞாயிறு | சரசுவதி பூசை |
| 10.10.2016 | திங்கள் | விஜயதசமி |
| 11.10.2016 | செவ்வாய் | கேதாரகௌரி விரதாரம்பம் |
| 14.10.2016 | வெள்ளி | நடேசர் அபிஷேகம் |

ஸ்ரீ சிவகாமசுந்தரி சுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசுவரர் சந்நிதி தினமும் காலை 10.00 மணி முதல் 11.00 மணி வரையும், மாலை 6 மணி முதல் இரவு 9 மணிவரை சிவனடியார்களுக்காகத் திறந்திருக்கும்.

**வெள்ளிதோறும் மாலை 8.30 மணிக்கு பெரியபுராணச் சொற்பொழிவு ஆலயத்தில் நடைபெறுகிறது**

தினமும் மாலை 8மணிக்கு பூசை வழிபாடு நடைபெறும். மேலே குறிப்பிட்ட விசேட தினங்களில் அபிடேக ஆராதனை, கூட்டு வழிபாடு போன்றவை நடைபெறும். அன்பர்கள் அனைவரும் சந்நிதிக்கு வந்து வழிபாடுகளிலே கலந்து எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசப்பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு சைவ முன்னேற்றச் சங்கம் அடியார்களை அன்புடன் வரவேற்கிறது.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

# ஆயிரம் பிறைகண்ட அன்னை



எண்பது வயது நிரம்பியவரை ஆயிரம் பிறை கண்டவர் என்று வாழ்த்தும்; வழுத்தும் பழக்கம் தமிழர்களிடம் உண்டு. கடந்த ஜூன் மாதம் இருபத்தாறாம் திகதி, ஞாயிற்றுக்கிழமை ஸ்டோன்லி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் அப்படியொரு வழுத்தும் விழா நிகழ்ந்தது. சைவ முன்னேற்றச் சங்கம் (ஐ.இ) ஏற்பாடு செய்த இவ்விழாவின் நாயகி, பிரபல கண் மருத்துவர் கலாநிதி திருமதி இந்திரா சிவயோகம் ஆவார். நம்மைக் காணும்போதெல்லாம் 'ஓம் நமசிவாய' என்று ஐந்தெழுத்தைச் சொல்லி வணக்கம் சொல்லும் வழக்கத்துக்கு உரியவர் அவர்.

விழாவில் அன்னையின் வாழ்க்கைக் குறிப்புக்களை மிக அழகாக திரு விமல் சொக்கநாதன் அவர்கள் தொகுத்து வழங்கினார்கள். திரு மீ ராஜகோபாலன் அவர்கள் "மனித ஜன்மம் புனிதம் என்பது எதனால்?" என்ற தலைப்பில் சொற்பொழிவு ஆற்றினார்கள். விம்பிள்டன் ஸ்ரீ கணபதி கோயில், இல்போர்ட் ஸ்ரீ செல்வவிநாயகர் கோயில், லூயிஷாம் இலண்டன் சிவன் கோயில், ஹைகேட் முருகன் கோயில், ஸ்டோன்லி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் கோயில், ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் கோயில் ஆகிய ஆலயங்களின் பிரதிநிதிகள் வந்து அன்னையைக் கௌரவித்தார்கள்; அவரைப்பற்றிப் பேசினார்கள்.

**"சிவப்பணிச் செல்வி"** என்ற பட்டத்தை அன்னைக்குச் சைவ முன்னேற்றச் சங்கம் வழங்கியது.

இலங்கையிலே புகழ்பெற்ற உயர்நீதிபதி திரு பொன் ஸ்ரீஸ்கந்தராசா, திருமதி கண்மணி தம்பதியரின் குடும்பத்தில் நான்கு பிள்ளைகளுள் இரண்டாவதாகப் பிறந்தவர் திருமதி இந்திரா அவர்கள். மிகச் சிறு வயதிலேயே மருத்துவத் துறையிலே பல்கலைக் கழகப் பட்டம் பெற்றார். பின்னர், இங்கிலாந்து வந்து புகழ்பெற்ற Moorfields Eye Hospitalஇல் கண் சிகிச்சையில் மேற்படிப்புப் படித்தபின் தாயகம் திரும்பினார். அங்கு பல மக்களுக்குப் பார்வை அளித்ததுடன் மருத்துவ மாணவர் பலருக்கும் சிறந்த ஓர் ஆசிரியராக, முன்னோடியாகச் சேவையாற்றினார். 1983இல் ஏற்பட்ட இனக் கலவரத்தால் இங்கிலாந்துக்குக் குடிபெயர்ந்தார். வட இங்கிலாந்தில் பல வருடங்கள் சேவையின் பின் ஓய்வுபெற்றார்.

அன்னையின் பெற்றோர் சைவசமயத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள். கொளும்பு கொம்பனித்தெருவில் அமைந்த ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயிலுடனும் சைவ முன்னேற்றச் சங்கத்துடனும் நெருங்கிய தொடர்பைப் பேணிவந்த குடும்பம் அது. அதனாற்போலும் அன்னையும் அவர்கள் காட்டிய வழியில், சைவநெறியில் வாழ்ந்து வருகிறார்கள். தம் வீட்டையே ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாளின் ஆலயத்துக்கு மிக அருகில் அமைத்துக்கொண்டார்கள். கோயிலுக்குச் செல்லும்பொழுது, தவறாது அர்ச்சனைக்குப் பூவும் அம்பாளை அலங்கரிக்க மாலையும் கொண்டுசென்று கொடுப்பது அவர் வழக்கம். அது தவிர, கோயிலிலே திருமுறைப் பாடல்களையும் முறையாக ஓதுவார்கள்.

கொளும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தில் தலைவராக இருந்ததும், சங்கத்தின் ஐக்கிய இராய்ச்சியக் கிளைக்குத் தலைவராகவும் தற்போது போஷகராகவும் இருப்பதும் அன்னையின் சமயப் பற்றுக்கு மேலும் எடுத்துக்காட்டாக அமைகின்றன. அவர் அடுத்த தலைமுறைக்கு ஒரு உதாரணமாகத் திகழ்பவர்.

சைவத்துக்கும் மக்களுக்கும் சேவையாற்றிவரும் அன்னை மேலும் பல வருடங்கள் தம் கணவருடனும் பிள்ளைகளுடனும் நலமாக வாழவேண்டும் என்று **'கலசம்'** ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசு வரப் பெருமானைப் பிரார்த்திக்கிறது.

# இறையருளைப் பெறும் வழி

தற்காலத்தில் இறையருளைப் பெறுவதற்கு மக்கள் முயல்கிறார்கள். "கடவுள்" என்பதன் பொருள் யாது? "இறைவழிபாடு" என்றால் என்ன? ஆகியவற்றை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும். இவற்றைப் புரிந்துகொண்டால், பொருள் விரயமாவதும், காலம் வீணாவதும் இல்லாமற்போகும். மக்களின் பலவீனம், அறியாமை, எளிவந்ததன்மை ஆகியவற்றைப் பயன்படுத்திப் போலியானவர்கள் பெரும் பொருள் சம்பாதிப்பதும் ஒழியும்.

பிறப்பும் இறப்பும் (ஆதியும் அந்தமும்) இல்லாதவன் இறைவன். இத் தன்மையுடைய ஒன்றையே "முழுமுதற்கடவுள்" என்கிறோம். பிறப்பும் இறப்பும் உடையவையெல்லாம் சிறு தெய்வங்கள் எனப்படும். இச்சிறு தெய்வங்கள் பிறக்கும், இறக்கும், மேல் வினையுஞ் செய்யும், வேதனைப்படும். இவற்றை வணங்குவதால் பயனில்லை என்றே கூறலாம்.

"இறைவழிபாடு" என்பது "ஓர் ஆன்மா தன்னைத்தான் கடைத்தேற்றிக்கொள்ள தானே எடுக்கும் முயற்சியாகும்". ஒரு மனிதனை நல்வழிப்படுத்துவது "வழிபாடு" எனலாம். இறைவழிபாட்டினால் ஒருவரிடம் நற்குணங்கள் மேலோங்கவேண்டும். வேண்டாத குணங்கள் முற்றிலும் தொலையவேண்டும். இந்த உண்மைகளைக் கூறும் தமிழ்வேதப் பாடலைக் காண்போம்.

**பெருகலாம் தவம் பேதைமை தீரலாம்**
**திருகலாகிய சிந்தை திருத்தலாம்**
**பருகலாம் பரமாயதோர் ஆனந்தம்**
**மருகலான் அடி வாழ்த்தி வணங்கவே - தமிழ்வேதம் - *5***

**பாடலின் கருத்து:**
திருமருகலில் எழுந்தருளியுள்ள சிவபெருமானாரை வாழ்த்தி வணங்குவதால் நம்மிடமுள்ள பேதைமை - அறியாமை நீங்கவேண்டும்; கோணலான மனம் (திருகலாகிய சிந்தை) திருத்தம் பெறவேண்டும்.

அறியாமை நீங்கவேண்டும் என்கிறார் திருநாவுக்கரசு சுவாமிகள். அறியாமை காரணமாகத்தான் நாம் கோபப்படு கிறோம். பிறர் பொருளுக்கு ஆசைப்படுகிறோம். சிறு தெய்வங்களை வழிபடுகிறோம். போலி வேடதாரிகளை நம்பி மோசம் போகிறோம். பொருள்தான் நம்மைக் காக்கும் என்று நம்புகிறோம். இப்படி இன்னும் பல.

இறைவழிபாடு செய்யும் நம்மிடம் தூய்மையான குணங்கள் (உயர்ந்த குணங்கள்) மேலோங்கி நிற்கவேண்டும். அப்பொழுது தம்மை மறந்து தலைவரை (இறைவரை) நினைக்க முடியும். இந்த நிலையிற்தான் இறையருளைப் பெறமுடியும். காரைக்கால் அம்மையார் இப்படிப்பட்ட நிலையிலேதான் இறையருளைப் பெற்றார்கள்என்பதை பெரிய புராணத்தால் அறிகிறோம்.

**மெய்ம்மறந்து நினைந்துற்ற விடத்துதவும் விடையவர்தாள்**
**தம்மனங்கொண் டுணர்தலுமே அவரருளால் தாழ்குழலார்**
**கைம்மருங்கு வந்திருந்த வதிமதுரக் கனியொன்று**
பெரியபுராணம் அம்மையார் வரலாறு

**37ம் பக்கம் பார்க்க**

# மஹாராஷ்டிரம்

## - பயணக்கட்டுரை

சாவகச்சேரியூர் Dr க. கதிர்காமநாதன்

## குங்குமனேசுவரர் கோயில்

மங்களம் குங்குமம். குங்குமம் மங்களம். குங்குமச் சிவப்பு நிறத்தில் மங்களமாக, ஜோதிலிங்கமாக அருள்பாலிக்கும் குங்குமனேசுவரர். குங்குமத்தில் மின்சக்தி - காந்த சக்தி - இருப்பதுபோன்று குங்குமனேசுவரரும், சமீபத்திலுள்ள எல்லோராக் குகைக்கு செல்லுமுன் அடியார்களைத் தன்வசம் இழுக்கிறார்.

**வரலாறு:**

குங்குமத்தை ஒருமுறை பார்வதி தேவியார் இடது கையில் வைத்து, வலதுகை மோதிர விரலால் தேய்த்தாராம். அப்போது ஒரு ஜோதி தோன்றி அவர் வழிபட்ட லிங்கத்தில் சென்று தங்கியதாம். உடனே லிங்கம் குங்கும நிறமாக மாறியது. லிங்கத்தை குங்குமத்தால் வழிபட்டதாலும், அது குங்கும நிறமானதாலும் குங்குமனேசுவரர் என்று பெயர்.

**இறைவன்:** குங்குமனேசுவரர்
**இறைவி:** குங்குமனேசுவரி

**எண்ணார் எயில்கள் மூன்றும் சீறும் எநிதைபிரான் இமையோர்**
**கண்ணாய் உலகம் காக்க நின்ற கண்ணுதல் நண்ணுமிடம்**
**மண்ணார் சோலைக் கோலவண்டு வைகலும் தேனருந்திப்**
**பண்ணார் செய்யும் பட்டினத்துப் பல்லவனீச்சுரமே**

**தரிசன பலன்:**

குறைகள் நிறைவேறும். விரும்பியவை கிடைக்கும். ஜோதிலிங்கத்தை வழிபட்ட பலன் கிடைக்கும்.

**பயணம்:**

மும்பையிலிருந்து காலை எட்டரை மணிக்கு ஹோட்டல் காரில் புறப்பட்டு மாலை நாலுமணி போல் அவுரங்கபாத்தை அடைந்தோம். குங்குமனேசுரர் கோயில் இருக்கும் 'வெறுள்' என்ற கிராமத்தில் தங்க வசதியோ, தகுந்த கடைகளோ இல்லாத காரணத்தால் இங்கு இரவு ஒரு விடுதியில் தங்கினோம்.

மறுநாள் அக்டோபர் மாதம் இரண்டாந்திகதி அன்று காந்தி பிறந்த தினமும் சதுர்த்தி திதியும் ஆகும். கோயிலை காலை எட்டு மணிபோல் அடைந்தோம். ஆலயத்தைச் சுற்றி குங்கும நிறக் கற்களால் கட்டப்பட்ட உயர்ந்த சுவரை - மதிலை - கண்டோம். ஓர் அரசனின் கோட்டை போலத் தோன்றியது. கோ = அரசன், இல் = இருப்பிடம். நல்ல பொருத்தம். நாங்கள் தெற்கு வாசலால் குனிந்து உள்ளே சென்றோம்.

இக்கோயிலை, காசி விசுவநாதர் கோயிலைப் புனரமைத்த மகாராணி அகில்யா பாய் ஹோக்கர்

Ahilyabai Holkar தான் புனரமைத்தார்.

பூக்கடைக்கு முதலிற் சென்றோம். அங்கு வில்வம் இலை, செவ்வரத்தம்பூ ஆகியவை வாங்கினோம். உள்ளே சென்று குழாயில் வந்த நீரால் கை கால் கழுவி பூக்களுக்கும் நீர் தெளித்து பக்க வாசல் ஊடாகச் சென்றோம். விசாலமான கோயில். பிரதான மண்டபத்தில் இருபத்துநான்கு தூண்கள் இருக்கின்றன. அவற்றிலே போற்றத்தக்க சிற்பங்கள் உள்ளன.

முதலில் வாசலில் இருந்த பிள்ளையாரைக் கும்பிட்டு நந்தியின் அநுமதி பெற்று கருவறை சென்றோம். கருவறை பதினேழு அடி சதுரமானது. கிழக்கே பார்த்த சிவப்பு லிங்கம். கொண்டு சென்ற வில்வ இலையை வைத்து, செவ்வரத்தம் பூவைச் சாத்தித் தொட்டு மனதார வணங்கினோம். நாமாகவே வணங்கும்போது இருக்கும் திருப்தியை விவரிக்க முடியாது. எமக்கும் இறைவனுக்குமிடையில் ஒருவரும் இல்லை. இதனாலேபோலும் அங்கு கிடைத்த பிரசாதம் காலை உணவுக்கே போதுமானதாக இருந்தது.

குங்குமனேசுவரருக்கு முன்னால் பளிங்குக் கற்களால் அமைக்கப்பெற்ற பார்வதி அம்பாள் சிலை உளது. இங்கு பரிவார மூர்த்திகளாக பிள்ளையார், முருகன், பைரவர், அநுமன் அமைக்கப் பெற்றுளது.



இக்கோயிலின் கோபுரம் வடநாட்டுப் பாணியில் வாழைப்பூ போன்று கூம்பு வடிவில் உள்ளது. இதன் நிறம் ஏனைய கோயில் கோபுரங்கள் போன்று சற்று கறுத்த நிறத்தில் உள்ளது.

குங்குமனேசுவரர் கோயிலில் ஐந்து காலப் பூசை உள்ளதால் எப்போதும் சென்று தரிசிக்கலாம். குறித்த காலம் இல்லை. சிவராத்திரி இங்கு விசேடம்.

கோயிலை அடைய வாகன வசதிகள் இருக்கின்றன. புகைரத மார்க்கமாக அவுரங்கபாத்தைத்தான் அடைய முடியும். விமானங்களும் அவுரங்கபாத்தைத்தான் அடையும்.

உலகப் புகழ்பெற்ற எல்லோரா குகைக்கோயில் ஒரு கிலோமீட்டர் அருகே இருப்பது குறிப்படத்தக்கது.

# கணநாத நாயனார்

உலகம் முழவதையும் ஈன்று காக்கின்ற உமாதேவியாரிடம் ஞானப்பால் உண்டருளிய ஞானசம்பந்தர் அவதரித்த சீர்காழிப் பதியில் மறையவர் குலத்தில் கணநாதர் என்று ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் சிவநேசர், அவர் திருத்தோணியப்பருக்கு நாள்தோறும் நல்ல திருப்பணி களைச் செய்து வந்தார். அவர், திருநந்தவனப் பணிசெய்வோர், நறுமலர் பறிப்போர், மாலை தொடுப்போர், திருமஞ்சன நீரைக் கொண்டு வருவோர், திருவிளக்கு ஏற்றுவோர், திருமுறை களை ஓதுவோர், அவற்றை வாசிப்போர், முதலிய கைத் திருத்தொண்டர்களுக்கு ஏதாவது குறை நேருமாயின், அதனை அவ்வப்பொழுதே நீக்குவார். இத் திருத்தொண்டுகளில் மக்களை ஈடுபடுத்தி, அவர்களைத் திருத்தொண்டர்களாக்குவார். இல்லறத்தில் மனைவியோடு அன்பாக இருந்து கொண்டே திருத்தொண்டு புரிவதிலும் வாய்மை காப்பதிலும் சிறந்து விளங்கி வந்தார்.

திருத்தொண்டராகிய கணநாதர், திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளை விரும்பும் பேரன்பாலே நாள்தோறும் முப்போதும் அருச்சனை வழிபாடுகள் செய்து வந்தார். அதனால் அவர் திருக்கயிலை மலையை அடைந்து பெரும் சிவகணங்களுக்குத் தலைவராகி வழித் தொண்டினில் நிலைபெற்றார்.

உலகம் உய்ய நஞ்சுண்ட சிவபெருமானுக்குத் திருத்தொண்டு புரிவதில் உறுதியான மெய்யுணர்வு அடைந்து அலகிலாத தொண்டர்களுக்கும் அறிவளித்து அவர் தம் திறத்தை அவனியில் பெருக்கிய கணநாதரின் கழல்களை வாழ்த்திவிட்டு அடுத்ததாகக் கூற்றுவனாரின் தொண்டைச் சொல்வோம்.

**"கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்"**

- சுந்தரர்

**(கணநாதர் - இது இறைவரின் திருப்பெயர். சிவகணங்களுக்குத் தலைவர் என்பது இதன் பொருள். காரணப் பெயர்.)**

## பொய்யடிமையில்லாத புலவர்

பொய்யடிமை இல்லாத புலவர் என்போர், நீலகண்டப் பெருமானின் திருமலரடிக்கே ஆளானவர்கள். அதுவே மெய்யுணர்வின் பயன் என்று துணிந்து விளங்கியவர்கள். இவர்கள் செய்யுள்களில் திகழும் சொற்களைப் பற்றிய தெளிவும், செம்மை தரும் பயனுடைய நூல்கள் பலவற்றையும் பயின்று ஆய்வுணர்வும் உடையவர்கள். அவைகளால் பெறும் மெய்யுணர்ச்சியின் பயன் சிவபெருமானின் மலரடிகளை வணங்குதலே என்ற கருத்தின் வழி நின்று தொண்டாற்றியவர்கள். சிவபெருமானின் செயலையன்றி வேறெதையும் வாய் திறந்து பாடாத நெறியில் நின்று கொண்டு செய்த மெய் யடிமையுடையவர்கள். அவர்களுடைய பெருமையை அறிந்து உரைக்க வல்லவர்கள். யார்தாம் உண்டு?

**"பொய்யடிமையில்லாத புலவர்க்கும் அடியேன்"**


-சுந்தரர்

# Hinduism in search of Answers

## Why worship in a temple?

G Arunai Vadivel Mudaliar

"The town which is without temple is inauspicious" - Saint Appar
"Do not reside in a village that has no temple" – Avvaiyar



The Tamil word for temple is Ko-il which literally means 'The King's Abode' or, 'The King's Palace'. Just as the king is the head of a certain region on earth, God is the head of the entire world and his abode is appropriately termed the King's abode , or, Koil.

### Has God an abode?

God is everywhere. He is ever-present. How then can he be confined to a temple? The entire Universe should be deemed to be his home. This may arise in the minds of some people. On the other hand, though God is formless, there is nothing to prevent Him from assuming any particular form for any particular reason. He is deemed to take different forms and to take His abode in various temples. It is not for his sake that he takes any form. Indeed, it is for the benefit of us and our souls that he does so.

### Why God assumes forms?

Human beings cannot have communion with God in His formless state. So, in His infinite mercy God takes on a form for the sake of human beings.

Souls suffer because of their intimate bond with the world. If they should sever their bond with the world, and strengthen their connection with God, this suffering would stop. Souls are accustomed to sensory perception only. For God to communicate with souls, he necessarily has to take a form.

The bodies which encase mortal souls are of flesh and blood. They are made of the three impurities. But the form which God assumes for Himself is made of His own grace. This has been made clear in the 61st, 65th and 67th songs of Sivajnana Siddhiar. It is stated that He does appear before those who adore Him.

There are two states in which God is conceived: One is Swarupa Sivam in which He is formless. The other is Tadastha Sivam in which He has form , name and function.


Forms are of two kinds: "True forms" and "image forms". True forms are those that God takes at a particular time and place for a particular purpose. Image forms are the forms carved in stone by people from either knowledge through books or insights of saints and sages. These forms are not the imagination of some people. They are believed to be the images of God as actually seen by the saints.

Only those who are spiritually evolved are able to see God in his true form. For those who are fortunate to get a Jnana guru who can impart jnanam, or Supreme Knowledge, the guru's form is also considered to be that of God. Others would need to worship His other image forms either those in the temple or those considered as Sangama Thirumenigal.

There are three ways in which we worship God. These are: Guru, Lingam, andSangamam. We worship the Guru, our spiritual master, as God himself. We worship the Lingam in the temples. The Lingam in the sanctum sanctorum is of the highest order. The other god-forms surround the central Lingam.



Spiritual men who conduct themselves in this world as God's representatives are also considered image forms of God (Sangama Thirumenigal).




## Need for temple worship?

The question may be asked: If God is all pervasive and present everywhere, why should He be worshipped only in the temples? It is true that God is omnipresent. But how many of us get the religious feeling anywhere and everywhere? When we are in the house we are beset with worries, just as we are beset with them in the office environment. For those of us who are unable to be fully aware of the presence of God everywhere, temple worship is the practical method of worshipping God.

**31ம் பக்கத்தொடர்ச்சி**

காரைக்கால் அம்மையார் இறைவரிடமிருந்து இரண்டு மாங்கனிகளைப் பெற்றார். இது எப்படி அவர்களால் முடிந்தது? மெய்ம்மறந்து - தம்மை மறந்து இறைவரை நினைந்தார், இறையருளைப் பெற்றார் என்கிறது பெரியபுராணம்.

இதே கருத்தனைப் பட்டினத்து அடிகளும் பதினொராந் திருமுறையில் கூறியுள்ளதைக் காணலாம்.


தம்மை மறந்து நின்னை நினைப்பவர்
செம்மை மனத்தினும் தில்லை மன்றினும் நடம்
ஆடும் அம்பலவாண...... - கோயில் நான்மணிமாலை - த.மே-11

ஆலயத்தினுள் சென்றவுடனே நம்மை நாம் மறந்துவிடவேண்டும். இறைமயமாகிவிடவேண்டும். அப்படிப்பட்ட மனத்தில் இறைவர் எழுந்தருளுவார் என்கிறார் பட்டினத்தடிகளும்.

பெரும்பொருள் செலவு செய்து, ஆடம்பரமான சடங்குகளால் இறையருளைப் பெறமுடியுமா என்பத வாசகர்களே உணரவேண்டும்.

**தமிழ்வேதம் மார்ச் 2008 இதழ் 3 மலர் 9**

# ஸ்ரீஅஜபா நடனம் - தியாகேசப்பெருமான் அருள்



அஜபா நடனம் என்பது சுவாமி முன்னும் பின்னும், இடது வலப்புறமாக சாய்ந்தும், மேலும் கீழுமாக பாய்ந்தும் குதித்தும் ஆடுவதைக் குறிக்கும்.

'அஜப' என்பதன் விளக்கம்:
ஜபம் என்பது குருவால் உபதேசிக்கப்பட்ட ஒரு மந்திரத்தைத் திரும்பத் திரும்ப நாவால் உச்சரிப்பது. அஜபம், அவ்வாறு உச்சரிக்கப்படாதது. உச்சரிக்கப்படாததைப்பற்றி நாம் ஏன் சிந்திக்கவேண்டுமென்றால், நாமாக நனவுடன் உச்சரிக்கவில்லை என்றாலும் நம்மை அறியாமல் நாம் ஒவ்வொருவரும் உண்மையில் உச்சரித்துக்கொண்டேதான் இருக்கிறோம். ஆம், ஒரு விநாடிகூடத் தவறாமல் 24 மணிநேரமும், ஒரு நாளைக்கு 21,600 தடவைகள் உச்சரிக்கிறோம். நாம் மூச்சை உள்ளே இழுக்கும்போதும் வெளியே விடும்போதும் "நானே அவன்", "அவனே நான்" என்று பொருள்படும் "ஹம்ச ஸொகம்" என்ற மகா சிரேஷ்டமான மகா காயத்ரி மந்திரத்' தொனியை எழுப்புகின்றோம்.
அதுவே 'அஜபை' என்பது.

அஜபா ஜபத்தின் பலனைத் தந்து அருளுமாறு வேண்டுவதுகூடச் சிறந்த பிரார்த்தனையாகும்.

அஜபா நடனம் பிரணாயாமப் பயிற்சியின் விளக்கமாகும். சாதாரண மனிதனுக்குச் சுவாசம் மூக்கின் இடதுபுறமாக(இடகலை) சில நாழிகை நேரமும், பின்னர் வலதுபுறமாக(பிங்கலை) சில நாழிகை நேரமும் இயங்கும் இரண்டு துளைவழியாகவும், சமமாக இயங்காது.
பிரணாயாமப் பயிற்சியின் மூலமாக, இரண்டு துளை வழியாகவும் சுவாசம் சமமாக இயங்கினால் இதுவே சுழுமுனை சுவாசமாகும். குண்டலினி இயங்க ஆரம்பித்துவிட்டது என்பது விளக்கம். சாதாரண மனித நிலை மாறி மேலான ஒரு ஞானியின் நிலைக்கு உயர்ந்துவிடுவார். இவைதான் 'அஜபா ஜபம்', 'அஜபா நடனம்', ஆகியவற்றின் சிறப்புகள்.

மனிதர் இயன்றவரை புலன்களைக் கட்டுப்படுத்தி நேர்மையாக வாழ்வதுடன் தினமும் இறை வழிபாடு. பிரணாயாமம், தியானம் பழகி வந்தால் உடல் ஆரோக்கியம் நன்றாகும். முகம் வசீகரமடையும், மனத்தின் இறுக்கம் தளரும், கவலைகள் நீங்கிவிடும். எந்தப் பிரசினை ஏற்பட்டாலும், அமைதியாகச் சிந்தித்து, திறம்பட முடிவெடுத்து எளிதாக சமாளித்து விடுவர். வாழ்க்கை எளிமையாகவும் இனிமையாகவும் விளங்கும். இறையருள் கிட்டும்.

இந்த இடத்தின் அமைப்பேகூட இராஜயோக விளக்கமாகும்.

கருவறையில் இறை உருவம் ஏதுமில்லை. நான்கு அடி பள்ளத்தின் நடுவில் ஒரு சிறி மேடையில் "ஓ"வும் அதன் உள்ளே அறுகோண முக்கோணமும் வரையப்பட்டுள்ளது. விநாயகரும் ஆறுமுகனும் இங்கே உறைவதாக ஐதீகம். இதுவே மூலாதாரம்.

பிராணன் ஒவ்வொரு மனிதரிடமும் மூலாதாரத்தில் இருந்து கொண்டு இயங்குகிறது. ஆனால் அது எல்லோரிடத்திலும் சிறப்பாகச் செயல்படாமல் முடங்கிக் கிடக்கிறது. பிராணனையே குண்டலினி என்றும் கூறுவர். குண்டலினி ஒரு நல்ல பாம்பைப் போன்றது என்று வர்ணிப்பது ஒரு யோக மரபு.

அருகிலுள்ள பாதினி மரத்தின் நுனி, கிளைகள் எல்லாம் தரையில் வளைந்து நெளிந்து செல்லும் பாம்பைப்போலவும், இலைகள் படம் எடுத்த பாம்பின் தலையைப்போலவும் தோற்ற மளிக்கின்றன. கருஞ்சிவப்பு நிறத்திலுள்ள அதன் ஒரு மலரைக் காம்புடன் சேர்த்துப்பார்த்தால் ஒரு அழகிய பறவை நினைவுக்கு வருகிறது. மலரின் நடுவயிற்றுப்பகுதியை சற்றுக் கிழித்துப்பார்த்தால் விரல்களுடன்கூடிய ஒரு பறவையின் கால்களைப்போல மலர்களின் இருமகரந்தத் தாள்கள் வெளிவரும். மரத்தின் படியில் விநாயகர் வீற்றிருக்கிறார். இதைப்போன்றதொரு உருவம்தான் ஸ்ரீதியாகராயர் சந்நிதியிலுள்ள மூலாதார கணபதியும்.

குண்டலினி எழும்பிவிட்டால் காமம் (வெறி) கெட்டு ஒழியும் என்ற கருத்தினை விளக்கவே இந்தச் சந்நிதிக்கு எதிரேயுள்ள காமத்தின் உருவகமான நந்தி, உடல் சோர்ந்து, தலையும் ஒரு பக்கம் சாய்ந்து விட்டதுபோலத் தோற்றமளிக்குமாறு அமைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீநடராஜர் காளியுடன் ஆடிய தாண்டவத்தில், காளி தலை குனிந்துவிட்டதின் மர்மமும் இக்கருத்தையே விளக்குகின்றது. அதற்கு அடுத்தபடியாக, பலிபீடத்தில் பிற ஆசைகளையும் பலி கொடுத்துவிட்டு மேலே சென்றால், கயிலாசத் தியாகரைத் தரிசிக்கலாம். கயிலாயத்திற்கும் மேலே உயர்ந்தது எதுவும் இல்லை என்பதற்காகவே, கயிலாதநாதருக்கும் மேலே ஸ்தூபி ஏதும் அமைக்கப்பட்டு இருக்கவில்லை.

வடபுறம் "ஸ்ரீ ரௌத்ர துர்க்கை" அருள் வழங்கும் தாயாக மணமாகாத பெண்களுக்கு மணம் செய்து வைக்கிறாள். தென்புறம், "கோபக்கனல்" விஸ்வாமித்ரேஸ்வரர் கோபம் தணிந்து பாதிரி மர நிழலில் அமைதியாக, தியானம்செய்துகொண்டிருக்கிறார்.

இந்த ஆலயத்தில் எங்கு பார்த்தாலும் எண்ணற்ற லிங்கங்கள் பல்வேறு பெயர்களில் தனித்தனி கொட்டில்களில் உள்ளன. இவர்களெல்லாம் ஹாடகேஸ்வரரைத் தரிசிக்க வந்து, திரும்பிச்செல்ல மனமின்றி, ஆங்காங்கே அமர்ந்து, தியானம் செய்துகொண்டிருப்பவர்கள்தானே?

இச்சந்நிதியில் உருவ வழிபாடோ, அலங்காரங்களோ, வேறு ஆரவாரங்களோ கிடையாது.

ஆதலினால் இயற்கைச் சூழலோடு கூடிய, அமைதி தவழும் தியான மண்டபமாக திகழ்கிறது.

நாம் அனைவரும் இறை அருளால் இன்புற்று வாழ்வோமாக!

**-(திருவாரூர் தியாகராஜசுவாமிகள் கோயிலின் சுவர் ஒன்றிலே காணப்பட்ட அஜபா நடனம் பற்றி விவரம்)**

# கண்ணனும் தாத்தாவும்



- முத்து -

சித்திரை மாதம் பிறந்ததுமே எல்லோரும் புது வருஷத்தின் வரவுக்காகக் காத்திருப்பார்கள். சிறுவர்கள் கைவிசேஷம் பெறுவதற்கு ஆவலுடன் காத்திருப்பார்கள். பெண்கள் புதிய புடைவை வாங்குவதில் ஆர்வமாக இருப்பார்கள். வேறுசிலர் புதுவருடம் எத்தகைய பலனைத் தரும் என்று எண்ணிக்கொண்டு இருப்பார்கள். துன்முகி என்ற பெயருடைய சித்திரைப் புத்தாண்டு (ஏப்பிரல் 13, 2016 ஆங்கிலத் திகதி) மாலை மூன்று மணியளவில் மலர்ந்தது. கண்ணனும் கண்ணனின் பெற்றோரும் தாத்தாவும் பாட்டியும் வீட்டிலே சுவாமிக்கு விளக்கேற்றி, பொங்கல், பழங்கள், பலகாரம் முதலியன படைத்து (நிவேதித்து) புதுவருடத்தை வரவேற்றனர். தாத்தா எல்லோருக்கும் கைவிசேஷம் கொடுத்து ஆசீர்வதித்தார். பின்னர் எல்லோரும் குடும்பமாகக் கடவுளுக்குப் படைத்த பிரசாதத்தை உண்டு மகிழ்ந்தனர்.

கண்ணன்: தாத்தா உங்கள் கையை நீட்டுங்கோ என்று சொல்லித் தன் சட்டைப் பையிலிருந்து ஒரு பவுனை அவர் கையில் வைத்தான்.

தாத்தா: (சிரித்துக்கொண்டே) ஓ.... !! நீ எனக்குக் கைவிசேஷம் தருகிறாயா கண்ணா?

கண்ணன்: ஆமாம் தாத்தா! உங்களுக்கு ஒருவரும் தரவில்லையே.

தாத்தா: எனக்கு எதற்குக் கண்ணா? வயதானவர்களுக்கு காசு அதிகம் தேவையில்லைக் கண்ணா. இளையவர்கள் நன்றாகப் பணம் சேமித்து, நன்றாக வாழவேண்டும் என்று பெரியவர்கள் அவர்களை ஆசீர்வதிப்பது தமிழ்ப் பண்பாடு. வாழ்க்கைக்குப் பணம் அவசியம் இல்லையா கண்ணா?

கண்ணன்: ஆமாம் தாத்தா, ‘சாப்பாடு உடை, வீட்டில் எல்லாவற்றுக்கும் பணம் தேவை கண்ணா’ என்று சொல்லி, அதற்கு ஒரு திருக்குறளும் சொல்லித் தந்திருக்கிறீர்களே தாத்தா.

தாத்தா: எங்கே, அதைச் சொல் பார்க்கலாம்!

கண்ணன்: **அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளிலார்க்கு**
**இவ்வுலகம் இல்லாகி யாங்கு**

தாத்தா: கெட்டிக்காரன், சரியாகவே சொல்லிவிட்டாய். பொருள் இல்லாவிட்டால் இந்த உலகத்திலே சந்தோஷமாக வாழ முடியாது. ஆண்டவன் அருளைப் பெறும்

வகையில் நாம் வாழாவிட்டால் (நீதி நெறிப்படி) மேலுலகத்தில் துன்பப்பட வேண்டும்.

**கண்ணன்:** அருளைப் பெற என்ன செய்யவேண்டும் தாத்தா?

**தாத்தா:** எல்லா உயிர்களிடத்தும் அன்பாக இருக்கவேண்டும். ஒருவருக்கும் துன்பம் செய்யக்கூடாது. அப்படி இருந்தால் எமக்கு ஆண்டவன் அருள் கிடைக்கும்.

**கண்ணன்:** எல்லோரும் எப்போதும் சந்தோஷமாக இருக்கத்தானே விரும்புவார்கள். அதற்கு அருளும் பொருளும் வேண்டும். இல்லையா தாத்தா?

**தாத்தா:** சரியாகவே புரிந்துகொண்டாய் கண்ணா. நல்ல புத்திசாலியாக இருக்கிறாய். எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது.

**கண்ணன்:** நீங்கள்தானே எனக்கு எல்லாம் சொல்லித் தருகிறீர்கள் தாத்தா.

**தாத்தா:** சொல்லித் தந்தாலும் அதைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் உனக்கு இருக்கிறது. அது எங்கள் பாக்கியம்.

**கண்ணன்:** எல்லாம் கடவுளின் அருள்தானே தாத்தா! இன்று கடவுள் மனிதராகவும் வந்து அருள்புரிவார் எனத் திருவிளையாடற் புராணத்தில் ஒருகதை உண்டென்று சொன்னீர்களே! அதைச் சொல்லுங்கோ தாத்தா.

**தாத்தா:** சரி, போனவாரம் படித்த கதையொன்று நினைவுக்கு வருகிறது. சொல்கிறேன் கேள் கண்ணா. கல்யானை கரும்பு தின்ற கதை.

**கண்ணன்:** அது எப்படித் தாத்தா, கல்யானை கரும்பு தின்ன முடியும்? நம்ப முடிய வில்லையே!

**தாத்தா:** கடவுள் நினைத்தால் எதுதான் நடக்காது கண்ணா!

**கண்ணன்:** ஆமாம் தாத்தா, கடவுள்தான் சர்வவல்லமை உடையவரென்று சொல்லித் தந்திருக்கிறீர்களே! முன்பு மாணிக்கவாசகரின் துயர்தீர்க்க, இறைவன் நரி களைக் குதிரைகளாக்கி, தானே குதிரைப்பாகனாகவும் வந்தவரல்லவா?

**தாத்தா:** அப்படி எத்தனையோ உண்டு கண்ணா. ஆண்டவனின் திருவிளையாடலை யார்தான் அளக்க முடியும்? இப்போ அபிடேக பாண்டியனுக்குக் கடவுள் எப்படி அருள்புரிந்தார் என்பதைக் கேள். ஒரு நாள் அபிடேகபாண்டியன் என்னும் அரசன் மதுரைப் பதியில் எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரக் கடவுளை வணங்கத் தன் மெய்காவலருடன் போனான். மிகுந்த பத்தியுள்ள பாண்டி மன்னனுக்குக் காட்சிகொடுத்து அருள்புரியச் சிவபெருமான் திருவுளங்கொண்டார். கோயிலின் உள்வீதியில் வடமேற்குப் பக்கமாக ஒரு சித்தர்போல அமர்ந்திருந்தார்.

கண்ணன்: சாரதாரண மக்கள்தான் தவறாமற் கோயிலுக்குப் போய் கடவுளைக் கும்பிடு வார்கள். அரசர்கள்கூட அடிக்கடி கோயிலுக்குப் போவார்களா?

தாத்தா: அந்தக் காலத்தில் சாதாரண மக்களைவிட அரசர்கள்தான் மிகுந்த பத்தி உடை யவர்களாக இருந்தார்கள் கண்ணா. தென்னிந்தியாவிலுள்ள பெரிய கோயில் களெல்லாம். அரசர்களாலேதான் கட்டப்பட்டவை. நீ வளர்ந்ததும் கோயில்களின் வரலாறுகளைப் படித்துப்பார். தெரியும்.

கண்ணன்: ஓம் தாத்தா, நான் படிக்கிறேன் தாத்தா. பாண்டிய மன்னன் கோயிலைச் சுற்றி வலம் வந்து வணங்கினாரா?

தாத்தா: கோயிலுக்குப் போவோர் எல்லோரும் கோயிலை வலம்வருவது வழக்கந் தானே கண்ணா. மன்னன் மனமுருகிக் கடவுளை வணங்கிய பின்பு வீதியை வலம்வந்தார். அவரின் மெய்க்காவலர் அரசரின் முன்னே சென்றுகொண் டிருந்தனர்.

கண்ணன்: மெய்க்காவலர் முன்னே சென்று, அரசன் வருவதால், வழியில் இருப்பவர் களைத் தூரப் போகும்படி துரத்துவார்களே தாத்தா!.

தாத்தா: ஆமாம் கண்ணா, மெய்க்காவலர் வீதியில் அமர்ந்திருந்த சித்தரைக் கண்டதும் தங்கள் கையிலிருந்த பிரம்பை நீட்டி 'எங்கள் அரசர் வருகிறார். அப்பால் எழுந்து போங்கள்' என்று அதட்டினார்கள்.

கண்ணன்: அவர் உடனே எழுந்து போய்விட்டாரா தாத்தா?

தாத்தா: அதுதான் இல்லை. சித்தர் ஒரு சிரிப்புடன் அசையாமல் இருந்தார்.

கண்ணன்: அவர்கள் சித்தரின் கையைப்பிடித்து இழுத்துச் செல்லவில்லையா தாத்தா?

தாத்தா: இல்லை கண்ணா! அந்தக் காலத்தில் அரசர்களுக்கு சிவனடியார்கள் மீது நல்ல மதிப்பு இருந்தது. அதனால், அரசர் அப்பெரியாரைப் பார்த்து, 'உங்கள் ஊர் எது? எந்த நாட்டைச் சேர்ந்தவர்? உங்கள் பெயரென்ன? உங்களின் சிறப்பென்ன? உங்களுக்கு ஏதாவது தேவையுண்டா?' என்று கேள்விகள் கேட்டு அவரைப்பற்றி விசாரித்தார்.

கண்ணன்: சித்தர் தனக்கு என்ன பெயர், எந்த ஊரென்று சொன்னாரா தாத்தா?

தாத்தா: சித்தர், 'அப்பனே நாம் எந்த நாட்டிலும் நகரிலும் உலவித் திரிவோம். ஆனாலும் நாம் இருப்பது காசியென்னும் அழகிய நகரிலேதான். தில்லை யம்பதி முதல் எல்லாச் சிவத்தலங்களையும் தரிசிக்கவே இங்கு வந்தோம்' என்றார்.

கண்ணன்: சித்தர் தன்னைப்பற்றி வேறு என்ன சொன்னார் தாத்தா?

**தாத்தா:** தான் வேதம் முதலாக அறுபத்து நான்கு கலைகளிலும் பெரும் அறிவுள்ளவர் என்றும் எல்லா வித்தைகளிலும் வல்லவரென்றும் சித்தர் சொன்னார். 'பல திருவிளையாடல்களைச் செய்து இங்குள்ள மக்களுக்கு வேண்டிய வர மெல்லாம் கொடுக்கவே இங்கு வந்திருக்கிறேன்' என்றும் சித்தர் சொன்னார். 'உன்னிடமிருந்து பெறவேண்டியது எனக்கு எதுவுமே இல்லை அரசே!' என்று சிரித்துக்கொண்டே சொன்னார் சித்தர்.

**கண்ணன்:** சித்தரின் இந்தக் கதையைக் கேட்டு அரசர் என்ன சொன்னார்? என்ன செய்தார்?

**தாத்தா:** இவரென்ன இப்படித் தன்னைப்பற்றிப் பெருமையடித்துக்கொள்ளுகிறாரே! இது எவ்வளவுதூரம் உண்மையாக இருக்குமென்று இவரை ஒருகாற் சோதித்துப் பார்ப்போம் என்று நினைத்தார்.

**கண்ணன்:** எப்படிச் சோதித்தார் தாத்தா?

**தாத்தா:** சித்தரின் திறமை எவ்வளவு என்பதை எப்படி அறியலாம் என்று அரசர் நினைத்தபோது ஓர் உழவன் ஒரு கரும்புக் கட்டு ஒன்றை அரசனுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துப் பணிந்து நின்றான். அரசரும் அதனைக் கையில் வாங்கிக்கொண்டார். பிறகு அரசன் சித்தரைப் பார்த்து 'நீர் உம்மை விட்டவர் உலகில் ஒருவரும் இல்லையென்று பெருமையடித்துக்கொள்கிறீரே. எங்கே இந்தக் கல்யானைச் சிலைக்கு இந்தக் கரும்பைக் கொடுத்து தின்னப்பண்ணும் பார்ப்போம்' என்றார். யானை கரும்பைத் தின்றால் உமக்கு எது வேணுமோ கொடுப்பேன் என்றும் கூறினார்.

**கண்ணன்:** மிகவும் சுவாரசியமான கதை தாத்தா. அப்போ சித்தர் என்ன செய்தார்?

**தாத்தா:** சித்தர் சிரித்துக்கொண்டே, 'அரசே உன்னால் ஆகவேண்டியது எதுவுமில்லை. நீ ஆசைப்படுதை நான் உனக்குக் கொடுப்பேன். வித்தை கற்றோர் அதனை மற்றவர்களுக்குக் காட்டிப் பயன் பெறுவார்கள். எல்லாம் அறிந்த எனக்கு எதிலுமே ஆசை இல்லை. இதோ பார் இந்தக் கல்யானை கரும்பைத் தின்னப்போகிறது' என்று சொல்லி, யானையைக் கடைக்கண்ணாற் பார்த்தார்.



**கண்ணன்:** உடனே யானை வாயைத் திறந்து கரும்பைத் தின்னத் தொடங்கியதா தாத்தா?

**தாத்தா:** ஆமாம் கண்ணா! யானை கண்ணைத் திறந்து பார்த்தது. யானையின் வாயிலிருந்து நீர் ஒழுகியது. வாயைத் திறந்து பெருஞ்சத்தமாகப் பிளிறியது. (கத்தியது) தனது தும்பிக்கையால் அரசரின் கையிலிருந்த கரும்புக் கட்டை வெடுக்கெனப் பிடுங்கி வாயில் வைத்துக் கருப்பஞ்சாறு வழிய வழியச் சப்பித் தின்றது.

**கண்ணன்:** ஆ..! அப்படியா தாத்தா? இதைப் பார்த்து அரசரும் மற்றவர்களும் திகைத்துப் போய் நின்றிருப்பார்கள். யானை வேறு என்ன செய்தது? சும்மா இருந்திருக்காதே!

**தாத்தா:** ஆமாம் கண்ணா தும்பிக்கையை ஆட்டிக்கொண்டு கம்பீரமாக நிமிர்ந்து நின்றது.

**கண்ணன்:** சித்தர் என்ன செய்தார் தாத்தா?

**தாத்தா:** அவர் இன்னும் ஒருதடவை யானையைப் பார்த்தார். உடனே யானை அரசரின் கழுத்திலிருந்த முத்துமாலையைப் பிடுங்கித் தின்றுவிட்டது.

**கண்ணன்:** அரசன் தன்னை யானை அவமானப்படுத்தியதென்று கோபிக்கவில்லையா தாத்தா?

**தாத்தா:** அரசருக்குக் கோபம் வராமல் இருக்குமா? அரசருக்குப் பயங்கரமான கோபம் வந்தது. கண்கள் சிவந்தன. கடுங்கோபத்துடன் சித்தரைப் பார்த்தான். சுற்றி நின்ற காவலர்களும் ஆத்திரத்துடன் சித்தரை அடிக்கக் கையை ஓங்கிக்கொண்டு போனார்கள்.

**கண்ணன்:** ஓ....! அப்படியா? பின்பு என்ன நடந்தது?

**தாத்தா:** சித்தர் தனக்கு அடிக்க வந்தவர்களைப் பார்த்துச் சிரிததுக்கொண்டே, 'நில்லுங்கள்' என்று தன் கையை உயர்த்தினார்.

**கண்ணன்:** காவலர்கள் சித்தரின் சொல்லுக்குப் பணிந்தார்களா?

**தாத்தா:** ஒரு பெரும் அதிசயம் நடந்தது. காவலர்களால் அசையவே முடியவில்லை. கற்சிலைபோல நின்றுவிட்டார்கள். ஓங்கிய கை அப்படியே நின்றது. தூக்கிய காலும் அவ்வளவில் நின்றது.

**கண்ணன்:** இதைப் பார்த்து அரசர் என்ன செய்தார் தாத்தா? பிரமித்து நின்றாரா?

**தாத்தா:** அரசரின் கோபம் பறந்தோடியது. வந்திருப்பது சாதாரண சித்தர் அல்ல என்றறிந்து பத்தி பொங்க அவர் பாதங்களில் விழுந்து வணங்கித் தான் அறியாமையாற் செய்த பிழையைப் பொறுக்கவேண்டும் என்று மன்றாடினார்.

கண்ணன்: கடவுள் எப்பவுமே மனமிரங்கி மன்னித்துவிடுவார். என்ன தாத்தா?

தாத்தா: சரியாகச் சொன்னாய் கண்ணா. மன்னரின் அன்புக்கு இரங்கி, 'உனக்கு என்ன வரம் வேண்டும், கேள்' என்றார் சித்தர்.

கண்ணன்: அரசர் என்ன வரம் கேட்டார் தாத்தா?

தாத்தா: பாண்டிய மன்னன் தனக்குப்பின் அரசாளக் குழந்தை இல்லையேயென்று கவலை கொண்டிருந்தார். அதனால், தனக்கு ஒரு மகன் பிறக்க அருள் செய்யவேண்டும் என்று வேண்டினார். அவர் வேண்டிய வரத்தை இறைவன் கொடுத்தான்.

கண்ணன்: பின்பு யானைக்கு என்ன நடந்தது தாத்தா? விழுங்கிய மாலைக்கு என்ன நடந்தது?

தாத்தா: சித்தராகிய சிவன் அந்த யானைமீது தன் திருக்கையை வைத்து அருள் பொழிந்தார். உடனே யானை தன் தும்பிக்கையை நீட்டி அரசருடைய முத்து மாலையைத் திருப்பிக் கொடுத்தது.

கண்ணன்: அரசர் மாலையை வாங்கினாரா? அல்லது யானைக்கே அதைப் போட்டு விட்டாரா?

தாத்தா: அவர் சந்தோஷமாகத் தன் மாலையை வாங்கிக்கொண்டார். சித்தரும் மறைந்து விட்டார். உடனே யானையும் மறுபடி கல்யானை ஆகிவிட்டது.

கண்ணன்: அரசருக்கு அப்போதுதான் தன்னுடன் விளையாடியது கடவுள்தானென்று புரிந்திருக்கும்.

தாத்தா: ஆமாம் கண்ணா. பெரிய வீரனான பாண்டிய மன்னனுக்குப் பயம் வந்துவிட்டது. தான் வணங்கும் சோமசுந்தரக் கடவுளே இப்படித் தன்முன் வந்து திருவிளை யாடல் செய்திருக்கிறாரென்று சொல்லிக் கடவுளை மறுபடியும் வாழ்த்தி வணங்கினார்.

கண்ணன்: கடவுள் தன்னுடன் வந்து திருவிளையாடல் செய்தது தனது பாக்கியமென்று அரசர் மகிழ்ந்தாரா? பெருமைப்பட்டாரா தாத்தா?

தாத்தா: அளப்பரும் சத்தி வாய்ந்த இறைவனை நான் அளக்க முயன்றுவிட்டேனே என்று அரசர் தன் அறியாமையை எண்ணி எண்ணி மிகவும் மனவருத்தப்பட்டார் கண்ணா!

கண்ணன்: உண்மைதானே தாத்தா, அரசரால் எப்படி ஆண்டவனை அளக்க முடியும்? அதுசரி, அரசருக்கு பின்னர் மகன் பிறந்தானா தாத்தா?

தாத்தா: கடவுளின் வரம் பிழைக்குமா? கண்ணா! அரசருக்கு ஒரு மகன் பிறந்தான்

கண்ணா. அவனுக்கு விக்கிரமன் என்று அரசர் பெயர் வைத்தார். மகன் வளர்ந்த பின்பு அவனுக்கு முடி சூட்டினார். தகப்பனுக்குப் பிறகு விக்கிரம பாண்டியன் பல ஆண்டுகள் சிறப்பாக அரசுபுரிந்தான். தந்தை அபிடேகபாண்டியன் இறைபத்தியில் தன் வாழ்வைக் கழித்து இறைவனடி சேர்ந்தார்.

கண்ணன்: நல்ல கதை தாத்தா, கடவுள் மனிதர் வடிவில் வந்து பத்தர்களைக் காப்பார் என்று நம்பமுடிகிறது.

தாத்தா: சரி கண்ணா, இனி நீ போய் உனது பள்ளிக்கூட வீட்டுப் பாடங்களைச் செய். நான் கோயிலுக்குப் போய் வருகிறேன்.

கண்ணன்: ஓம் தாத்தா இரவு சாப்பிடும்போது சந்திப்போம்.

# ஒற்றையடிப்பாதை



நம்ம மதம் ஒற்றையடிப் பாதை மாதிரியிருக்கிறது. ஒற்றையடிப் பாதையை யார், எப்போது போட்டார்கள்? சொல்லத் தெரியவில்லை. மேற்பார்வைக்கு தார் றோட் உசத்தியாய் (சிறந்ததாக) இருக்கிறது. ஆனால், யோசனை பண்ணிப் பார்த்தால், தார் றோடை விட ஒற்றையடிப் பாதைதான் பல விஷயங்களில் மேல் என்று தெரிகிறது. தார்றோடும், கொண்டுவிடாத இடத்துக்கு இந்த ஒற்றையடிப் பாதைதானே கொண்டு சேர்க்கிறது. ஜனங்கள் நடக்க நடக்க, தார் றோட் றிப்பேர் (பழுதடைந்து) ஆகி வருஷா வருஷம் மராமத்துப் (திருத்தவேண்டி)பண்ணவேணடியிருக்கிறது.

ஒற்றையடிப் பாதையோ நடக்க நடக்கத்தான் இன்னம் நன்றாக ஆகிறது. றிப்பேர் என்ற பேச்சே கிடையாது. அதேபோல அக்சிடென்டும் (விபத்தும்) தார் றோட்டில்தானேயன்றி ஒற்றையடிப் பாதையில் உண்டோ? மேலே வழியல்லையென்று பிளைண்ட் அலியாக (பாதை முடிவு) சில தார்றோட் மொட்டையாக முடிகிறமாதிரி எந்த ஒற்றையடிப் பாதையாவது முடியுமா? நன்றாகத் திறந்துவிட்ட மார்க்கம். கூட்டம் கூட்டமாக பூர்விகர்கள் போயே புல் பூண்டு இல்லாமல் பொலிஷ் ஆன மார்க்கம். ஆக்சிடெண்.டே இல்லாத மார்க்கம். தார் றோட் மாதிரி பார்க்கப் பகட்டு இல்லாவிட்டாலும், பரம சௌகரியமாக, நிதானமாகக் கால்நடையிலேயே பரமாத்மாவிடம் கொண்டுவிடுகிற மார்க்கம். இப்படிப்பட்ட ஒற்றையடிப் பாதைதான் நம்முடைய பூர்வாசாரம். தார் றோடானால் கார் சவாரி பண்ணி சுருக்கா (விரைவில்) போய்ச் சேர்ந்தவிடலாமே! என்றால் ஒற்றையடிப்பாதையிலோ அப்படிச் சுற்றிக்கொண்டு போகததால் குறுக்கு வழியில் நடந்தே, அக்சிடெண்ட் எதுவுமில்லாமல். போய்ச் சேர்ந்துவிடலாம். றோடே போட முடியாத இடங்களில் காட்டிலே, மலையிலே கூட இதுதான் மார்க்கமாய் இருக்கிறது.

**நன்றி கல்கி தகவல் விமால் இலண்டன்**



# Thirukural stories
# திருக்குறட் கதைகள்

திருமதி சாவித்திரி ஆனந்தன்
Mrs Savithiri Anandan

## Self Respect (Maanam)

Chapter : 97

Poem : 969

**"மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர நீப்பர் மானம் வரின்"**

**A rare species of Dear seeks its end when its hairs shed;
People of dignity forfeit life to save honour**

'Silappathikaaram' is a great highly appreciated Tamil epic. The story is based on an anklet ('Silambu' in Tamil) – hence the name ' Silappathikaram'. The author of this epic is Ilanko Adikal. The hero of this epic, Kovalan and the heroine Kannagi got married and lived happily for some years in Poompukaar. Kannagi's life later went astray because of the association of Kovalan with a dancer called Maathavi. Kovalan left Kannagi and settled in Mathavi's house.

Kovalan spent all his wealth on the dancer and became penniless. He returned repentantly to his uncomplaining wife Kannagi. Both of them went to Madura to resurrect their life. The only property they had then was a pair of Ruby anklets of Kannagi. Kovalan went to the city to sell one of the anklets to get money. Seeing Kovalan with the anklet, the Royal Goldsmith, who had stolen the pearl anklet of the Pandian Queen, framed Kovalan for the theft. Even though the Pandiyan king was very just, unfortunately, took a hastey decision and had Kovalan beheaded for the theft.

ON hearing her husband's death, Kannagi stormed into the Court of Pandiyan kingdom. Her eyes ablazed with anger, carrying the other anklet on her hand to prove the innocence of her husband, broke the anklet to split its Rubies, therby proving that the anklet sold by Kovalan was not the queen's pearl anklet, but it was the Ruby anklet of her's.

At that very moment the king realized that his judgment was flawed, he collapsed and died. By his death, he proved to the world that righteousness is worth more than one's life.

# மானம்

அதிகாரம் : 97 குறள் : 969

**மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்**
**உயிர்நீப்பார் மானம் வரின்**

கவரிமான் ஆனது தனது உடலின்றும் ஒரு மயிர் நீங்கினாலும் அதன் பிறகு உயிர் வாழ மாட்டாது. அது போலவே உயிரைவிட மானமே பெரிதென மதிப்பவர்கள் அத்தகைய மானத்தை இழக்க நேர்ந்தால் தம் உயிரைத் துறந்துவிடுவார்கள்.


"தன்னிலையில் தாழாமை, தாழ்வுவரின் உயிர் வாழாமை" என்பதே மானம் என்ற சொற்பதத்துக்கான மிகக் குறுகிய வரைவிலக்கணம் எனலாம்.

'நெஞ்சத்தையள்ளும் சிலப்பதிகாரம்' எனப் போற்றப்படும் சிலப்பதிகாரம் ஒரு முத்தமிழக் காவியம் ஆகும். இளங்கோ அடிகளால் எழுதப்பட்ட இந்நூல் சிலம்பின் கதையைக் கருப்பொருளாகக் கொண்டிருப்பதால் 'சிலப்பதிகாரம்' எனும் பெயர் கொண்டது.

கதை நாயகன் கோவலனும் நாயகி கண்ணகியும் திருமணமாகிச் சில காலங்கள் பூம்புகார் நகரில் இனிதே வாழ்ந்திருந்தனர். ஆடல் மகளான மாதவியுடன் கோவலனுக்குத் தொடர்பு ஏற்பட்டபோது கண்ணகியின் வாழ்க்கை தடம் மாறியது. கோவலன் கண்ணகியைப் பிரிந்து மாதவி வீட்டிலேயே வசிக்கலானான். இதன் காரணமாக அவனுடைய செல்வமெல்லாம் கரைந்துபோக, ஏதுமற்றவன் ஆகினான். தன் தவறை உணர்ந்து, மீண்டும் குணவதியான கண்ணகியிடம் சென்றான். தங்கள் வாழ்க்கையைப் புனரமைத்துக்கொள்ளும் பொருட்டு இருவரும் மதுரைக்குச் சென்றார்கள். அப்போது எஞ்சியிருந்தது மாணிக்கப் பரல் கொண்ட, கண்ணகியின் காற்சிலம்புகள் மட்டுமே. அதில் ஒரு சிலம்பை விற்றுப் பணம் பெறுவதற்காகக் கோவலன் மதுரை நகருக்குச் சென்றான். அதே சமயம், பாண்டிய அரண்மனையின் பொற்கொல்லன் அரசியினுடைய முத்துப்பரல் கொண்ட காற்சிலம்பைத் திருடியிருந்தான். சமயம் பார்த்து, கோவலன் விற்கக் கொண்டுவந்த சிலம்பு, திருடப்பட்ட அரசியினுடைய சிலம்பே எனக் கூறிய பொற்கொல்லன் பழியைக் கோவலன் மீது சுமத்திவிட்டான். என்றும் நீதி தவறாத பாண்டியன் துரதிஷ்டவசமாகக் கோவலன் மீது சுமத்தப்பட்ட திருட்டுக் குற்றச்சாட்டினை உண்மையென்று நம்பிக் கோவலுனுக்கு மரணதண்டனை விதித்தான்.

கணவன் இறந்த செய்தி அறிந்த கண்ணகி, பாண்டிய மன்னனுடைய அரசவையினுள்ளே புயலெனப் புகுந்தாள். கண்களில் கோபம் நெருப்பெனச் சுடர்விட, தனது மறுசிலம்பைக் கையில் ஏந்தியவண்ணம் வந்தவள், தன் கணவன் நிரபராதி என்பதை நிரூபிக்கும் சாட்சியாய்த் தன் காற்சிலம்பைப் போட்டு உடைத்தாள். உடைந்த சிலம்பிலிருந்து தெறித்து விழுந்த மாணிக்கப்பரல்கள் பாண்டிய மன்னனுக்கு அவன் செய்த தவறை உணர்த்தின.
நீதியைக் காப்பாற்ற முடியாமல், ஒரு அரசனுக்குரிய மானத்தை இழந்தபின் அந்த நேர்மையாளன் உயிர் வாழ விரும்பவில்லை. அந்த விநாடியே மயங்கிச் சரிந்த மன்னன் உயிர் நீத்தான்.

**உயிரை விட மானம் பெரிது என்ற வள்ளுவன் வேதம் உயிர் பெற்றது.**


லண்டனில் No1 நகை மாளிகை
Lakshmis Jewellers
எங்கள் மாதாந்திர
நகைச்சீட்டு
திட்டத்தில் சேர்ந்து
பயனடையுங்கள்
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை




இலண்டனில் Setline Data அச்சகத்தால் (தொலைபேசி: 0207 232 0446) அச்சிடப்பட்டு,
சைவ முன்னேற்றச் சங்கத்தால் 10-07-2016 அன்று வெளியிடப்படுகிறது.